விலை ரூபா: 6.00 பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

யாழ்ப்பாணம் நாவாந்துறைப் படிப்பகம்

# வலம்புரி

# VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 தை26 ஞாயிற்றுக்கிழமை (09.02.2003) தொலைபேசி~ 2223378 ஒலி 52

English Academy
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
மின் அஞ்சல் — thangan 672002 @ yahoo.com
உங்கள் பிள்ளைகளுக்கு
சிறந்த இடம்
Better Place
for your children

## வட-கிழக்கு மக்களின் மனித உரிமையை பாதுகாக்க யாப்புத் தயாரிக்கப்படும்

### அரசு ~ புலிகள் 5ம் சுற்றுப் பேச்சில் இணக்கம்

(பேர்ளினில் இருந்து அன்ரனி ஜீவா)

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான 5ம்கட்டப் பேச்சுவார்த்தையின் இரண்டாம் நாள் இறுதி அமர்வுகள் நேற்று ஜேர்மன் தலைநகர் பேர்ளினில் உள்ள நோர்வேத் தூதரகத்தில் நடைபெற்று சுமுகமான முறையில் நிறைவு பெற்றுள்ளது.

நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் பேச்சு மேசையில் கூடிய அரச புலிகள் தரப்புப் பிரதிநிதிகள் பல விடயங்கள் தொடர்பாகப் பேசி பொது உடன்பாடு கண்டுள்ளனர்.

வடக்குக் கிழக்கு மக்களின் மனித உரிமைகளை பாதுகாப்பது தொடர்பில் ஒரு யாப்புத் தயாரிக்கப்பட வேண்டுமென்று இரு தரப்பும் ஏகமனதாக தீர்மானித்துள்ளனர்.

இவ் யாப்பினைத் தயாரிக்கும் பொறுப்பு சர்வதேச மன்னிப்புச் சபையின் முன்னாள் பணிப்பாளர் நாயகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவ் யாப்பின் பிரதிகள் ஜப்பானில்இடம்பெறவுள்ள ஆறாம் கட்டப் பேச்சுக்கிளில் சமர்ப்பிக்கப்பட ஏற்பாடாகியுள்ளது.

விடுதலைப் புலிகள சிறுவர்களை

(10ம்பக்கம் பார்க்க)

## உலகக்கிண்ணம்

(ஹேப்டவுன)

2003ம் ஆண்டிற்கான உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டித் தொடரின் முதலாவது ஆட்டம் இன்று மாலை 6 மணிக்கு (இலங்கை நேரப்படி) ஹேப்டவுன் மைதானத்தில் பல இலட்சக் கணக்கான ரசிகர்கள் முன்னிலையில் கோலாகலமாக ஆரம்பமாக விருக்கிறது.

இன்றைய ஆட்டத்தில் தென்னாபிரிக்காவை எதிர்த்து மேற்கிந்தியத் தீவுகள் அணி மோதுகின்றது. நேற்று நள்ளிரவு உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டிக்கான ஆரம்பவைபவம் இடம் பெற்றது.

(மேலதிக விபரங்கள் இரண்டாம் பக்கத்தில்)


## தொலைக்காட்சியில் கேள்விகளுக்கு ஜனாதிபதி - பிரதமர் பதில்

### சமஷ்டி முறைக்கு இருவரும் ஆதரவு

# இலங்கையில் சர்வதேசம் காட்டும் அக்கறை சுயநலம் கொண்டது!



## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு



(நமது நிருபர்)

**இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வில் சர்வதேச சமூகம் காட்டிவரும் அதீதமான அக்கறை சுயநல நோக்கத்தையே அடிப்படையாகக் கொண்டது. தனிநாட்டுக் கோரிக்கையை கைவிட்டதாக விடுதலைப்புலிகள் இதுவரை அறிவிக்கவில்லை. அப் பொறுப்பைச் செய்வதற்கு சர்வதேச சமூகம் தவறிவிட்டதென்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.**

சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் "திருப்புமுனை" தொலைக்காட்சியில் உரையாடல் நிகழ்ச்சி ஒன்றில் பங்குபற்றியிருந்தனர்.

அந் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாடிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

ஸ்ரீலங்கா "..பர்ஸ்ற்" அமைப்பு இந் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தது.

இந்த உரையாடல் நிகழ்ச்சி நேற்றிரவு 7.30 மணிக்கு ரூபாவாஹினி ஐ அலைவரிசையில் ஒளிபரப்பானது.

இந் நிகழ்ச்சியில் ஒவ்வொரு கேள்வியும் ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் சம நேரத்தில் கேட்கப்பட்டது. ஜனாதிபதி சந்திரிகா ஜனாதிபதி செயலகத்திலும் பிரதமர் அலரிமாளிகையிலும் இருந்தவாறு கேள்விகளுக்குப் பதில்களை அளித்தனர்.

தற்போதைய அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சியில் சர்வதேச சமூகத்தின்-குறிப்பாக நோர்வேயின் பங்களிப்புத் தொடர்பாக இருவரிடமும் கேட்கப்பட்டபோது; இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வில் சர்வதேசத்தின் பங்களிப்பு பாராட்டக் கூடியது. அந்த சர்வதேச பங்களிப்பையும், ஆதரவையும் முதன் முதலில் பெற்றுக் கொண்டது.

(10ம்பக்கம் பார்க்க)

### வீரச்சாவடைந்த கடற்புலிகளுக்கு

## யாழ்.குடாநாட்டில் துக்கதினம் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுக் கடற்பரப்பில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கடற்புலிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நேற்று யாழ். குடாநாடெங்கும் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

கடலில் கடற்படையினரின் முற்றுகைக்குள் இருந்த படகை தீயிட்டுக் கொளுத்தி தம்மை அழித்துக்கொண்ட மாவீரர்களுக்கு குடாநாட்டு மக்கள் உணர்வெழுச்சியுடன் அஞ்சலி செலுத்தும் வகையில் வீதிகள், நகரங்கள், சந்திகள் மற்றும் பொது இடங்களில் சிவப்பு மஞ்சல் கொடிகளுடன் கறுப்புக் கொடிகளையும் கட்டி பறக்க விட்டிருந்தனர்.

(10ம்பக்கம் பார்க்க).

கிரிக்கெற் ரசிகர்களுக்கு
ஓர் மகத்தான சந்தர்ப்பம்



நாளை
எதிர்பாருங்கள்
உங்கள் வலம்புரியில்
மாபெரும்
பரிசுப்போட்டி

## படகு வெடித்த இடத்தில் கடற்படை தேடுதல்

(நமது நிருபர்)

நெடுந்தீவுக் கடற் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் படகு வெடித்துச் சிதறிய இடத்தில் கடற்படையின் சுழியோடிகள் கடலுக்கடியில் பலத்ததேடுதல் வேட்டையில் இறங்கியுள்ளனர்.

படகு வெடித்துச் சிதறிய இடத்தில் ஆயுதங்களின் சிதைந்த பாகங்கள் இருக்கின்றதா என்று கண்டறியும் முகமாகவே பெருந்தொகையான சுழியோடிகளும், கடற்படைப் படகுகளும் தீவிர சோதனையில் ஈடபட்டுள்ளதாக கடற்படைப் பேச்சாளர் ஒருவர் நேற்றுத் தெரிவித்துள்ளார். (வ)

## புலிகளின் படகுகளை இனிமேல் கடற்படையே சோதனை இடும்!

### -கண்காணிப்புக் குழு அறிவிப்பு-

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்குரிய படகுகளில் அவர்கள் பிரயாணம் செய்யும்போது அவற்றை சோதனையிடும் நடவடிக்கைகளில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு இனிமேல் ஈடுபடமாட்டதென்று இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தீர்மானித்துள்ளதாக குழுவின் பேச்சாளர் றொய்ட்டர் றெக்கில்சன் தெரிவித்துள்ளார்.

நெடுந்தீவுக் கடற் பிராந்தியத்தில் விடுதலைப் புலிப்போராளிகள் மூவர் தாம் பிரயாணம் செய்த படகை இலங்கை கடற்படையினர் சோதனையிட முற்பட்டபோது அதனை தீயிட்டு தகர்த்து வீரச்சாவை தழுவிக் கொண்டமையை அடுத்து யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு பேச்சாளர் றொய்ட்டர் றெக்கில்சன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

(10ம்பக்கம் பார்க்க)

## இலங்கையில் மீண்டும் தூக்குத் தண்டனை

### உட்துறை அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் தூக்குத் தண்டனைய மீண்டும் அமுல் நடத்தவுள்ளதாக உட்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கா தெரிவித்துள்ளார்.

வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு விஜயம் செய்த உட்துறை அமைச்சர் அங்குள்ள தூக்குமேடையை பார்வையிட்டதுடன் தூக்குத் தண்டனையை அரசாங்கம் மீண்டும் அமுல் நடத்த உத்தேசித்துள்ளதென்றும் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; நாட்டில் குற்றச்செயல்கள் அதிகரித்து வருவதினால் தூக்குத் தண்டனையை அரசாங்கம் அமுல் நடத்த வேண்டுமென மக்களும் விரும்பு

(10ம்பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்







# இன்றைய போட்டியில் தென்னாபிரிக்காவா? மேற்கிந்திய தீவுகளா? வெல்லும்

2003ம் ஆண்டுக்கான உலகக்கிண்ணப் போட்டிகளின் முதலாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்கா அணி, மேற்கிந்தியதீவுகள் அணியை எதிர்த்து ஹேப்ரவுணில் இன்று மோதவுள்ளது. குழு B இல் இடம் பெறும் இப் போட்டி இருஅணிகளுக்கும் பெரும் சவாலாக அமையுமென கிரிக்கெற் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். தறபோது இரு அணிகளும் சம பலத்தில் இருப்பது தெரிந்ததே.

தென்னாபிரிக்கா அணியை பொறுத்தவரையும். சகலதுறை ஆட்டக்காரர்களை அதிகமாக கொண்ட அணியாக திகழ்கிறது. ஜக்கலிஸ், அணித்தலைவர் ஷோண்பொலக், லான்ஸ் குளுஸ்னர் போன்றோரை சிறப்பாக குறிப்பிடலாம். வேகப்பந்து வீச்சாளர் அலன்டொனால்ட்டை, தவிர எஞ்சிய அனைத்து வீரர்களும் சிறப்பாக துடுப்பெடுத்தாடக் கூடியவர்கள். உலகின் முதல்தர களத்தடுப்பாளர், ஜொண்டி றூட்ஸ்மற்றும் கிப்ஸ் போன்றோர் சிறப்பான களத்தடுப்பில் ஈடுபடக் கூடியவர்கள். துடுப்பாட்ட வரிசையில் ஹரிகோர்ஸ்ரன், கேஷல் கிப்ஸ், ஷக்கலிஸ, ஜொண்டிறூட்ஸ், லான்ஸ் குளுஸ்னர் போன்றோர் எந்த நேரத்திலும் சிறப்பாக துடுப்பெடுத்தாடக் கூடியவர்கள். இவையனைத்தையும் விட இவர்களது சொந்த மண்ணில் இப்போட்டிகள் இடம்பெறவுள்ளன. ஆயினும் இது வரை தொடர்ந்த தென்னாபிரிக்காவின் துரதிஷ்டம் இம்முறை விட்டு விலகுமா?

மேற்கிந்திய தீவுகள் அணியும் தாம் சளைத்தவர்கள் அல்ல என்பதை மீண்டும ஒரு முறை தென்னாபிரிக்காவிலேயே பயிற்சிப்போட்டியில் நிரூபித்துள்ளனர். அணித்தலைவர் கார்ல்கூப்பர் அவ்வணியின் சிறந்த சகலதுறை ஆட்டக்காரராவார். மற்றும் துடுப்பாட்டத்தைப் பொறுத்த வரையில் மிகப்பலம் பொருந்திய அணி. அஸ்லிகைல்ஸ்,பிறைன் லாரா, சந்திரபோல், ராம் நரெஷ் சர்வான், மார்லன் சாமுவேல்ஸ், கார்ல் கூப்பர், றிக்கா டோபவல் என மிகச்சிறந்த துடுப்பாட்ட வரிசையை இவ்வணி கொண்டு விளங்குகிறது. பந்து வீச்சைப் பொறுத்த வரையில் மேர்வின் டிலான், பீற்றோ கொலின்ஸ், ட்ரேக்ஸ் போன்றோரின் வேகப் பந்து வீச்சை குறிப்பிடலாம். களத்தடுப்பை பொறுத்த வரையில் அணியில் றிக்காடோபவல் சிறந்த களத்தடுப்பாளராக திகழ்கிறார்.

இன்று ஆரம்பமாகும் உலகக் கிண்ணத் திருவிழாவில் முதல் போட்டியில் பங்கு பற்றும் இவ்விரு அணிகளும் சுப்பர் சிக்ஸ்க்கு தகுதி பெறும் என நம்பப்படுகிறது.

(55)

# முதல் போட்டியிலிருந்தே விளையாடுவார் முரளிதரன்

இலங்கையின் நட்சத்திர சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் உடல் நலம்தேறி நியூசிலாந்து அணிக்கு எதிரான போட்டியில் விளையாடுவார் என்று உறுதியானதால் இலங்கை அணி உற்சாகம் கொண்டுள்ளது


காயம் காரணமாக திங்களன்று நடைபெறவிருக்கும் உலகக் கிண்ணப் போட்டியில் முரளிதரன் விளையாடமாட்டார் என்று முன்பு செய்திகள் தெரிவித்திருந்தன.

வியாழனன்று நடைபெற்ற பயிற்சி ஆட்டத்தில் முரளிதரன் ப்ரீ ஸ்டேட் அணிக்கு எதிராக பந்து வீசி 8 ஓவர்களில் வெறும் 13 ஓட்டங்கள் மட்டுமே கொடுத்து 1` விக்கெட்டை கைப்பற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் வீரர்கள் அக்ரம், யூனஸ் பெற்ற 490 மற்றும் 409 ஒருநாள் விக்கெட்டுக்கு அடுத்த நிலையில் முரளிதரன் 304 விக்கெட்டுக்களை கைப்பற்றிய நிலையில் இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



தென்னாபரிக்க அதிபர் தெபோமெபகி தென்னாபரிக்க அணித் தலைவர் ஷோன் பொலக்கை கைலாகு கொடுத்து வாழ்த்துவதை காணலாம்.




8வது உலகக்கிண்ணப் போட்டியையொட்டி வெளியிடப்பட்டுள்ள ஒரு அவுன்ஸ் தங்கம், வெள்ளியிலான ஞாபகார்த்த நாணயத்தைப் படத்தில் காணலாம்.











1979,1983, 1987, 1992, 1996,1999 உலகக் கிண்ணத்தை வென்ற அணிகள் ஆனந்தத்தில்

## உலகக் கிண்ணம் ஒரு பார்வை

அதிகபட்ச ஸ்கோர்

| ரன்கள் | அணி | எதிரணி | இடம் | தேதி | வென்ற அணி |
|---|---|---|---|---|---|
| 398-5 (50) | இலங்கை | கென்யா | கண்டி | 6.3.96 | இலங்கை |
| 373-6 (50) | இந்தியா | இலங்கை | டவுண்டன் | 26.5.99 | இந்தியா |
| 360-4 (50) | மே.இ. தீவுகள் | இலங்கை | கராச்சி | 13.10.87 | மே.இ.தீவுகள் |

குறைந்தபட்ச ஸ்கோர்

| ரன்கள் | ஓவர்கள் | அணிகள் | எதிரணி | இடம் | தேதி | வென்ற அணி |
|---|---|---|---|---|---|---|
| 45 | 40.3 | கனடா | இங்கிலாந்து | மான்செஸ்டர் | 14.6.79 | இங்கிலாந்து |
| 68 | 31.3 | ஸ்காட்லாந்து | மே.இ.தீவுகள் | லீசெஸ்டர் | 27.5.99 | மே.இ.தீவுகள் |
| 74 | 40.2 | பாகிஸ்தான் | இங்கிலாந்து | அடிலெய்டு | 1.3.92 | முடிவு இல்லை |

## மர்மக் கப்பலை மடக்கிப் பிடிக்கும்

# கூட்டுப்படை நடவடிக்கை பற்றிய தகவல் வெளியானது எப்படி?

## உடனடி விசாரணை நடத்துக! பாதுகாப்பு அமைச்சர் அவசர பணிப்பு

(கொழும்பு)

**வடபகுதியின் இலங்கைக் கடற்பரப்பில் 200 கடல் மைல்களுக்கு அப்பால் காணப்பட்ட மர்மக் கப்பலை மடக்குவதற்கான இலங்கை இராணுவக் கடற்படையின் கூட்டு நடவடிக்கை பற்றிய புலனாய்வுத் தகவல் வெளியாகியது எவ்வாறு என்பது பற்றி உடனடி விசாரணை நடத்துமாறு பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன அதிகாரிகளைப் பணித்துள்ளார்.**

கூட்டு நடவடிக்கை ஆரம்பித்ததுமே குறிப்பிட்ட மர்மக்கப்பல் மாயமாய் மறைந்து விட்டது. இது ஓடி மறைந்ததற்கு இரகசியப் புலனாய்வுத் தகவல் அவர்களுக்கு தெரியவந்ததே காரணமாகும். இவ்வாறு பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மர்மக் கப்பல் பற்றிய தகவலை இன்னுமொரு நாடே கொடுத்திருந்தது. ஆனால் இது பற்றிய தகவல் கசிந்து சென்றமை மர்மமாக இருக்கிறது. புலிகள் தமது இரகசிய நடவடிக்கைகளை நிறைவேற்றும் விதத்தில் புலனாய்வுத் தகவல்கள் அவர்களுக்கு எவ்வாறு கிடைக்கின்றன என்றும் அமைச்சர் திலக் மாரப்பன படைத்தளபதிகளிடம் வினா எழுப்பியுள்ளார்.

மர்மக் கப்பல் மீது எடுக்கப்படக் கூடிய நடவடிக்கைகள் பற்றிய செய்திகளை இலத்திரனியல் ஊடகங்களுக்குக் கூட வெளிப்படுத்தாமலிருப்பதில் இராணுவத் தளபதி அவதானமாகச் செயற்பட்டு வந்தார். ஆயினும் இது தொடர்பான இரகசியத் தகவல்ஏற்கனவே புலிகளின் கைகளுக்கு கிடைத்து விட்டது என்றும் மேற்படி வட்டாரங்கள் தெரிவித்தன.

அண்மையில் இலங்கைக் கடல் எல்லைக்கப்பால் மர்மக் கப்பல் ஒன்று 200 கடல் மைல் வேகத்தில் சென்று மறைந்துள்ளதாகவும்,

இக்கப்பலைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் இலங்கை விமானப் படை மற்றும் கடற்படை கூட்டாக ஈடுபட்ட போது அம்முயற்சி பயனளிக்கவில்லை எனவும் ஏற்கனவே செய்தி வெளியாகியிருந்தது தெரிந்ததே. (உ)



## காலமோ சிறிது கருமமோ பெரிது ஒழுக்க சீலத்தை உருவாக்குவதே உயர்வு

### இந்திய உயர் ஸ்தானிகராலய ஆலோசகர்

(தென்மராட்சி)

இன்றைய காலத்தின் தேவைக்கு சுவாமி விவேகானந்தரின் ''காலமோ சிறிது கருமமோ பெரிது'' என்ற வாக்கு பல்வேறு தரப்பட்டவர்களிற்கும் பல்வேறு வரைவிலக் கணங்களைக் கொடுக்கும். நல்ல ஒழுக்கமான குடும்பத்திற்கும் தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவர்க்கும் நாட்டிற்கும் மிகவும் அத்தியாவசியமான தாரக மந்திரம் இதுவாகும்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் ஆலோசகரான கே.வி.கோகுலசந்திரன் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற சுவாமி விவேகானந்தர் கண்காட்சியின் ஆரம்ப வைபவத்தில் உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ணா சாரதா சேவாச்சிரமத்தின ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இக்கண்காட்சி, மகளிர் கல்லூரி அதிபர் திருமதி எம்.பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்றது.

கல்லூரியின் இந்து மகளிர் மன்றத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற இக்கண்காட்சிக்கான ஏற்பாடுகளை ஆச்சிரமத்தின் முதல்வர் சுவாமி சித்ரூபானந்தா மேற்கொண்டிருந்தார்.

ஆலோசகரான கே.வி.கோகுலசந்திரன் அங்கு தொடர்ந்தும் உரையாற்றும் போது,

காலத்தின் தன்மை கடமையின் தன்மை அதன் பரிமாணங்கள் ஒவ்வொருவருடைய சுவதர்மத்திற்கும் ஏற்றவாறு அமையும். ஆயினும் அவர்கள் கூறிய மந்திரம் ஒழுக்கம் சீலம் உடையவர்கள் ஆற்ற வேண்டிய பணியையும் பரபரப்பையும் கால நிர்ணயத்தையும் சுட்டுகின்றது.

அவற்றை அறிவுடைய பெரியோர்கள் பல்வேறு, காலகட்டங்களில் எடுத்துக் கூறியுள்ளனர். அவற்றை இளம் சமூகத்திற்கு அறிவுறுத்தி பயனுள்ள பண்பாடு நிறைந்த சமுதாயப் பணியில் அர்ப்பணிப்பது தான் சுவாமி விவேகானந்தருக்கு நாம் செய்யும் வணக்கமாகும்.

சுவாமி விவேகானந்தருடைய யாழ்ப்பாண வருகை யோகர் சுவாமியை மலரச் செய்து சுட்டிக் காட்டியது. வருங்காலம் பல ஞானிகளை யாழ்ப்பாணம் மூலமாகச் சுட்டிக்காட்டிப் பெருமையடைய வேண்டுமென்பதே எனது பிரார்த்தனையாகும் என்றார்.

இந்து மகளிர் மன்றச் செயலாளர் செல்வி கிருபா சரவணமுத்து நன்றியுரை கூறினார்.

உயர் ஸ்தானிகராலய ஆலோசகர் இந்நிகழ்ச்சியினைத் தொடர்ந்து கொழும்புத்துறையில் இருக்கும் யோகர் சுவாமிகள் ஆச்சிரமத்துக்கும் விஜயம் செய்தார். (உ-77)



யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய தரம்-1 மாணவர்களின் கால்கோள் விழா அண்மையில் நடைபெற்ற போது நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் திருமதி சா.காங்கேயன் உரையாற்றுவதையும், அருகில் அதிபர் திருமதி யோ.நாகேந்திரா அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

## வணிகர் கழக அறிவுறுத்தல்களை வர்த்தக நிலையங்கள் புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

வர்த்தக நிறுவனங்கள் சில தமது அறிவித்தல்களுக்கு அமைய செயல் படுவதில்லை என யாழ்ப்பாணம் வணிகர் கழகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து கழகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில்,

சனிக்கிழமை பி.ப. 3 மணிக்குப் பின்பும் ஞாயிறு, போயா மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களிலும் வர்த்தக நிலையங்களைத் திறப்பதால் ஊழியர்கள் பாதிக்கப் படுவதுடன் ஏனைய வர்த்தக நிலையங்களும் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றன.

இதனால் சகல வர்த்தக நிலையங்களையும் கழகத்தின் அறிவுறுத்தல்களுக்கமைய செயல்படுமாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-5)

## மாணவர்களுக்கு அறிவுறுத்தல் கையேடு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அமைச்சு எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை கொழும்பில் நடத்தவுள்ள இரண்டாவது உலக இந்து மாநாட்டினையொட்டி பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கான கட்டுரை, பேச்சு, பண்ணிசை ஆகிய போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தற்கிணங்க இப்போட்டிகளுக்கான விண்ணபங்கள் நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலிருந்தும் மாநாட்டுச் செயலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

இப்போட்டிகள் தொடர்பான அறிவுறுத்தல்களையும் திருமுறைப் பாடல்களையும் கொண்ட கையேடு மாநாட்டுச் செயலகத்தின் மூலம் தற்போது போட்டிகளுக்கு விண்ணப்பித்த பாடசாலை அதிபர்கள் ஊடாக மாணவர்களிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.

போட்டிகள் முதலில் மாவட்ட ரீதியிலும் பின்னர் தேசிய மட்டத்திலும் நடைபெறவுள்ளதால் அவற்றுக்கு அமைவாக அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்து போட்டிகளுக்கு தம்மை தயார் படுத்திக் கொள்ளுமாறு போட்டிகளுக்கு விண்ணப்பித்த மாணவர்களை மாநாட்டுச் செயலகம் கேட்டுள்ளது. (உ)


## தபாலக ஆலோசனைக் குழுத் தெரிவு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு தபாலகத்தின் குறைபாடுகளைக் களைந்து அதனை நவீனமயப்படுத்தி திறம்படச் செயற்படுத்தும் வகையிலான ஆலோசனைகளை வழங்குவதற்காக தபாலக ஆலோசனைக் குழுத் தெரிவுக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றது.

நெடுந்தீவு தபால் அதிபர் நா.தங்கராஜா தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் தலைவராக நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் எஸ்ரி.தில்லைநாதன், உபதலைவராக நெடுந்தீவு மாவட்ட வைத்திய அதிகாரி டி.மகேந்திரன், செயலாளராக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.பி.அருளப்பு, பொருளாளராக நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க கணக்காளர் ஏ.கோபாலபிள்ளை ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (உ-126)





யா/ பரியோவான் கல்லூரியில் நேற்று ஆரம்பமான மாணவர் தலைவர்களுக்கான, தலைமைத்துவக் கருத்தரங்கில் பிடிக்கப்பட்ட படங்கள். படங்கள்: க.பவன்

## இன்று ஒரு தகவல்

### ஆபிரஹாம் லிங்கன்

அமெரிக்க ஜனாதிபதி ஆபிரஹாம் லிங்கன் ஒரு நாள் தன்னுடைய கோச்சு வண்டியில் தலைநகரான வாஷிங்டனுக்குப் போய்க்கொண்டிருக்கிறார். கோச்சு வண்டி ஒரு சாலையிலே போய்க கொண்டிருக்கிறது. அந்தச் சாலையின் ஒரு பக்கத்திலே பயங்கரமான சதுப்புநிலம். சதுப்பு நிலமென்றால் அது புதைகுழி-புதைமணல் என்கிறோமே- அது மாதிரி அந்தச் சதுப்பு நிலத்தில் யாராவது மாட்டிக் கொண்டால் அவ்வளவு தான்! ஆளைக் கொஞ்சம் கொஞ்சமாக உள்ளே அமுக்கிவிடும். தப்பித்துக் கரையேறுவது கஷ்டம். அப்படிப்பட்ட நிலம் அது.

ஆபிரஹாம் லிங்கன் ஏதோ ஒரு முக்கியமான அரசாங்க வேலையாகப்போய்விட்டுத்திரும்பிவந்து கொண்டிருக்கிறார். அதனால் அந்தச் சமயத்தில் அவர் விலை உயர்ந்த ஆடைகளை அணிந்திருந்தார். அப்படி அவர் அந்தக் கோச் வண்டியில் வந்து கொண்டிருக்கிறார். அந்தச் சமயத்தில் ஒரு காட்சி அவரின் கண்களில் பட்டு விட்டது. என்ன தெரியுமா? சாலைக்குப் பக்கத்திலே இருந்த சதுப்பு நிலத்திலே ஒரு இளம் பன்றிக்குட்டி சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறது. பரிதாபமாகக் கத்திக் கொண்டிருக்கிறது. அதைப் பார்த்தார் லிங்கன். அவருக்கு என்னவோ மாதிரி ஆகிவிட்டது.

உடனே வண்டியை நிறுத்தச் சொன்னார் கீழே இறங்கினார். தன்னுடைய விலையுயர்ந்த ஆடைகளைப் பற்றி லட்சியம் பண்ண வில்லை. தனக்கே ஆபத்து வரலாம்என்பதைப் பற்றியும் கவலைப்படவில்லை. தான் ஒரு குடியரசுத் தலைவர் என்பதைப் பற்றியும் நினைக்கவில்லை. நேராகச் சதுப்பு நிலப்பக்கமாகப் போனார். அந்தச் சேற்றிலே இறங்கிப் பன்றிக்குட்டியைக் காப்பாற்றிக் கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தார். அதன் பின்னர் நிம்மதியாகக் கோச்சுவண்டியில் ஏறி வெள்ளை மாளிகைக்கு வந்து சேர்ந்தார். உடுப்பு, உடம்பு முழுவதும் சேறு, சகதி, பார்க்கிறவர்களுக்கெல்லாம் ஆச்சரியமாகப் போய்விட்டது. அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

இவர் நேராக உடை மாற்றிக் கொள்வதற்கு போனார். எல்லாரும் கோச்சு வண்டி ஓட்டிக் கொண்டு வந்தவனிடம் ஓடிப் போய் என்ன ஆனது என்று கேட்டார்கள். அவன் வந்த வழியில் நடந்த விபரத்தைச் சொன்னான். ஆபிரஹாம்லிங்கனுடைய இந்த இரக்ககுணத்தை எல்லோரும் பாராட்டினார்கள், புகழ்ந்தார்கள் ஆனால் இதற்கு லிங்கன் என்ன சொன்னார் தெரியுமா? ''தயவு செய்து இந்தப் புகழ்ச்சியான பேச்சுக்களை ஒதுக்குங்கள். அவை வேண்டாம். அந்தச் சின்னப் பிராணி சகதியில் மாட்டித் துடித்துக் கொண்டிருந்தது. அதைப்பார்த்தேன். உடனே என் இதயத்தில் ஒரு முள் தைத்தது மாதிரி ஓர் உணர்வு. அந்த முள்ளைப் பிடுங்கி எறிந்தேன் அவ்வளவு தான்."

உண்மையிலே அந்தப் பிராணிக்கு நான் உதவினேன் என்பதை விட, எனக்கு ஏற்பட்ட இன்னலைப் போக்கிவிட்டேன் என்பது தான்உண்மை. அது தான்பொருத்தம்.. அப்படி இருக்கும் பொழுது, இதிலே புகழ்வதற்கு என்ன இருக்கிறது? என்றாராம் ஆபிரஹாம் லிங்கன். எவ்வளவு நிதானமான வார்த்தைகள் பாருங்கள்.

இந்தக் காலத்தில் நம்மில் பலர் அப்படி உண்டு. நீச்சல் தெரியாத ஒருவன்தண்ணீரில் இறங்கி விட்டான். தண்ணீர் ஆழம் என்பது அதன் பின்னர் தான் தெரிந்தது. தத்தளிக்க ஆரம்பித்து விட்டான். வாள் வாளென்று கத்துகிறான். கரையில் நின்று கொண்டிருந்த ஒருவர் இதைப் பார்த்தார். உடனே அவருக்கு இதயத்திலே முள் தைத்தது மாதிரி ஓர் உணர்வு. உடனே குபீர் என்று தண்ணீரிலே பாய்ந்தார்... அவனைக் காப்பாற்றிக் கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த இன்னொருவர்.. காப்பாற்றின அந்த ஆளைப் பாராட்டினார். புகழ்ந்தார். ''என்னைப் புகழாதீர்கள" என்றார் அவர். 'ஏன்?' என்று கேட்டார் இவர். 'நான் அந்த ஆளை ஏன் காப்பாற்றினேன் தெரியுமா? அவன் நேற்றுத் தான் சார் என்னிடம் முந்நூறு ரூபா கடன் வாங்கியிருக்கிறான். இவன் தண்ணீரில் போய் விட்டானென்றால்-நான் கொடுத்த கடனும் தண்ணீரிலே போய் விடுமே! அதனாலே தான் காப்பாற்றினேன்' என்றான் அந்த ஆள்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

---

முல்லை மாவட்டச் செயலக

## புனரமைப்புக்கு அரசு ஒதுக்கிய நிதி எங்கே?

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு மாவட்ட அரச செயலகத்தின் புனரமைப்பிற்கு அரசினால் ஒதுக்கப்பட்ட நிதி, தமக்குக் கிடைக்கவில்லை என முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நி.சுகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,நிக்கோட் நிறுவனமும் மற்றும்-வன்னிப் புனர்வாழ்வு அமைச்சு ஆகியவற்றின் நிதியுதவியுடன் மட்டுமே முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் புனரமைக்கப்பட்டது.

இது தொடர்பான விபரங்களை சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு அனுப்பியுள்ளோம் என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கிழக்கு மற்றும் வன்னிப் பெருநிலப்பரப்பிற்கு புனரமைப்புப் பணிகளுக்காக பெருமளவு நிதி ஒதுக்கீடு செய்ய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இணங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

---

## இலங்கை-இந்திய கப்பல் சேவை

# ஆரம்பிப்பதற்கான சாத்தியங்கள்குறித்து அறிக்கை சமர்ப்பிக்க பிரதமர்பணிப்பு

(புத்தளம்)

தலை மன்னாருக்கும்-இராமேஸ்வரத்துக்குமான பயணிகள் கப்பல் சேவையினை ஆரம்பிப்பதற்கான தற்போதைய சாத்தியப்பாடுகள் குறித்து ஆராய்ந்து அறிக்கையொன்றை தமக்கு சமர்ப்பிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், புனர்வாழ்வு அகதிகள் விவகார, மீள்குடியமர்த்துகை அமைச்சின் இணைப்பாளருமான ரிசாத் பதியுதீனை கோரியுள்ளார்.

இதனையடுத்து வியாழக்கிழமை மாலை தலைமன்னாருக்குச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர் பதியுதீன் அப்பிரதேச மக்கள், மீனவர்கள், பாதுகாப்புஅதிகாரிகளுடன் இது தொடர்பான பேச்சு வார்த்தையினையும் நடத்தியுள்ளார்.

அதி உயர் பாதுகாப்பு வலயமாக தலை மன்னார் பிரதேசம் காணப்படுவதால் அங்கு புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம், மீண்டும் தலை மன்னாரை அபிவிருத்தி செய்யக்கூடியதாக இருக்குமென அவர் தெரிவித்துள்ளார்.

இன்னும் சில தினங்களில் பிரதமரைச் சந்தித்து தலைமன்னார் இராமேஸ்வர கப்பல் பயணத்தை ஆரம்பிப்பதற்கான விபர அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளதாக தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன், துறைமுகங்கள், கப்பல் துறை கிழக்கின் அபிவிருத்தி அமைச்சர் ரவூப்ஹக்கீமிடமும் கப்பல் சேவையின் அவசியம் குறித்து வலியுறுத்தியுள்ளதாகவும் கூறியுள்ளார்.

மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருந்த பகுதிகளையும் பாராளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன் பார்வையிட்டுள்ளார். (உ)

---

## தொழில் அமைச்சருக்கு எதிராக

# கொழும்பு நீதிமன்றில் மனுத்தாக்கல்

(கொழும்பு)

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் பணிப்பாளர்களில் ஒருவரான சூராஜ் டீ. தந்தெனி, தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவுக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் ஐந்து கோடி ரூபா இழப்பீடு கோரி மனுத்தாக்கல் செய்துள்ளார்.

தொழில் அமைச்சில் இடம்பெற்ற சில குழறுபாடுகள் சம்பந்தமாக மனுதாரர் தனது பத்திரிகையில் எழுதியதைத் தொடர்ந்து தொழில் அமைச்சர் மனுதாரரை தகாத வார்த்தைகளால் ஏசியுள்ளார்.

சண்டேலீடர் பத்திரிகைக்கு பேட்டியளித்த போதே அபகீர்த்தி ஏற்படுத்தும் வார்த்தைகளை மேற்படி மனுதாரர் மீது அமைச்சர் உபயோகித்திருந்தார்.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத் தாபனத்திலிருந்து பிரிந்து சென்ற ஒரு நிறுவனத்துடன் தொழில் அமைச்சு கூட்டுச் சேர்ந்துள்ளதென அமைச்சின் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இதனைச் சுட்டிக்காட்டியதாலேயே அமைச்சரின் கோபத்திற்கும், வெறுப்புக்கும் மனுதாரர் ஆளாகியுள்ளார்.

தன்னை ஒரு பொய்யன் எனவும் நேர்மையற்றவர் எனவும் அமைச்சர் கூறியதாக மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

தனக்கு அபகீர்த்தியை உண்டாக்கியுள்ள அமைச்சர் ஐந்து கோடி ரூபா இழப்பீடு வழங்க வேண்டுமென மனுதாரர் கோரியுள்ளார்.(உ)

---

## இராசி பலன்

09.02.2003

(தை 26, ஞாயிறு)

அட்டமி பி.இ 4.41வரை
பரணி பி.ப 4.21வரை
இராகுகாலம் 5.05 - 6.35
சுபநேரம் 9.35 - 11.05

கார்த்திகை விரதம்

**மேடம்**
பெரியோரால் மதிக்கப்படுதல், தெய்வ சிந்தை, காரியஅநுகூலம், சயனசுகம்.

**இடபம்**
காரிய அலைச்சல், நிலைமாற்றம், உறவினர் சந்திப்பு,சுபசெலவு.

**மிதுனம்**
கீர்த்தி,குடும்பத்தில் மகிழ்ச்சி, செய்தொழிலால் நன்மை, முயற்சிபலிதம்.

**கடகம்**
அதிகாரம், வேலைச்சிறப்பு, சந்தோசமான சம்பவம், காரியசித்தி.

**சிங்கம்**
கட்டுப்பாடு, தந்தைவழிஉறவு, தொழிலில்புதியமாற்றம்,முயற்சி தாமதம்.

**கன்னி**
உறவினர் வெறுப்பு,கொடுக்கல் வாங்கல் பிணக்கு,காரியதடங்கல், உடல் வியாதி.

**துலாம்**
போசனசுகம்,காரியஅநுகூலம்,நண்பர்கள் உதவி, தெய்வசிந்தை.

**விருச்சிகம்**
மனமகிழ்ச்சி,எடுத்தகருமங்கள் கைகூடும், சகோதரர்உதவி,தேகநலன்.

**தனுசு**
சொந்தப்பிணக்கு,முயற்சிகைகூடும், குடும்பசுகம், உடல்நலக்கேடு.

**மகரம்**
வாகனநன்மை, கௌரவம், பொருள் சேர்க்கை,காரியதாமதம்.

**கும்பம்**
தடைப்பட்ட கருமங்கள் நிறைவேறும், தனலாபம்,சகோதரர் உதவி, வாக்கு மேன்மை.

**மீனம்**
வீதண்டாவாதம்,திடீர்நன்மை, காரியதாமதம், அதிகாரிகள் சந்திப்பு.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

---

## பாகிஸ்தான் வருமாறு

# பிரதமருக்கு அழைப்பு

(கொழும்பு)

பாகிஸ்தான் பிரதமர் மீர் சபருல்லா கான் ஜமாலியுடன் பேச்சுக்கள் நடத்துவதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விரைவில் பாகிஸ்தான் செல்லவுள்ளார்.

கடந்த செவ்வாயன்று சார்க் அமைச்சர்கள் மகாநாட்டில் கலந்து கொள்வதற்கு இலங்கை வந்த பாகிஸ்தானின் அமைச்சர் ரெய்ஸ் முனிர் அகமத், பாகிஸ்தான் பிரதமரின் இந்த அழைப்பை பிரதமர் விக்கிரமசிங்கவிடம் கையளித்திருந்தார்.

தான் பாகிஸ்தான் செல்வதற்கு மிகவும் விருப்பமாயுள்ளதாகவும் பிரதமர் மேற்படி அமைச்சரிடம் தெரிவித்துள்ளார். (உ)



---

## கைத்தொழில் அபிவிருத்தி

# திட்டங்கள் புனரமைப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திட்டங்கள் புனரமைக்கப்படவுள்ளன.

இப்புனரமைப்புப் பணிக்கென இந்தியா 100 கோடி அமெரிக்க டொலர்களைக் கடனாக வழங்க முன்வந்துள்ளது.

இத்தொகையின் 60 சதவீதமான நிதி வடக்கு-கிழக்கு மாகாணத்தின் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கு பயன்படுத்தப்படவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் ரோகித போகல்லாகம,

அங்கு அமைச்சின் அதிகாரிகளுடனும், கைத்தொழில் அபிவிருத்தி சபை அதிகாரிகளுடனும் இது குறித்து பிரஸ்தாபித்துள்ளார்.

இதற்கமைய மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள கடதாசித் தொழிற்சாலையை புனரமைப்பதற்கு 20 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (உ-8)

---

## இந்திய விமானப்படைத்

# தளபதி இலங்கை விஜயம்

(கொழும்பு)

இந்தியாவின் விமானப்படைத் தளபதி எஸ். கிருஷ்ணசாமி உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு எதிர்வரும் 12ஆம் திகதி இலங்கை வரவுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

இவர் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் பாதுகாப்பு அமைச்சர் உட்பட உயர் அதிகாரிகள் பலரையும் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தவுள்ளார். (உ-8)

# நெடுந்தீவு துயரச் சம்பவத்தை விளக்கி

# புலிகளின் அரசியல்துறை அறிக்கை

(கிளிநொச்சி)

06.02.2003 மாலை 3 மணியில் இருந்து எமது மூன்று போரளிகளையும் பொறுப்பேற்ற கண்காணிப்புக்குழுவினிடம் ஸ்ரீலங்கா கடற்படையினர் வள்ளத்தைக் சோதனையிட்டாலோ அல்லது குறிகட்டுவானுக்குக் கொண்ட செல்லமுற்பட்டாலோ பேராளிகள் வள்ளத்துடன் சேர்த்து தம்மை அழிப்பார்கள் என உறுதியாகத் தெரிவிக்கப் பட்டிருந்தது.

அதற்கு கண்காணிப்புக் குழுவினர் அப்படி எதும் நடைபெறாது எனக்கூறி தாமே சோதனையிட்டனர் என்பதும் போராளிகளையும் வள்ளத்தையும் மீண்டும் எம்மிடம் ஒப்படைப் பதாக உறுதியளித்திருந்தார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

நெடுந்தீவுக் கடலில் இடம்பெற்ற துயரச் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின அரசியல்துறை தலைமைய கம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப பட்டுள்ளது.

அதில் மேலும் 06.02.2003 அதிகாலை வழமைபோல் நாச்சிக்குடா பகுதியில் மீன்பிடிக்கச் எமது மீன்பிடிவள்ளம் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட இயந்திரக் கோளாறால் நெடுந்தீவுக்கு மேற்காக நகர முடியாது நின்றது. பழுதடைந்து நின்ற மீன்பிடி வள்ளத்தை கரையிலிருந்து சென்ற எமது விரைவுப் படகு நண்பகல 11 மணியளவில் நாச்சிக்குடா நோக்கி இழுத்தக் கொண்டு வந்தது.

அவ்வேளை அவர்களை நோக்கி ஸ்ரீலங்கா கடற்படையினர் வந்த போது விரைவுப்படகினர் டோறாவுக்கு அருகில் சென்று விபரம் கூறினார். பின்னர் தொடர்ந்து விசைப்படகு வள்ளத்தை கட்டியிழுத்துக் கொண்டு வந்தது. மீண்டும் மாலை 3.00 மணிக்கு கண்காணப்புக் குழுவனருடன் வந்த மற்றைய டோறா சோதனையிட்ட வேண்டுமென வலியுறுத்தியது. கண்காணிப்புக்குழு கேட்டுக்கொண்டதற்கு அமைவாக கடற்படையினரை மறுத்து கண்காணிப்புக் குழுவினரை சோதனையிடச் சொல்லப்பட்டது. சோதனையின்பின் ஆயுததளபாடங்கள் எதுவும் இல்லையென உறுதிப்படுத்தப்பட்ட பின்பும் தொடர்ந்து செல்ல கடற்படையி னர் அனுமதிக்கவில்லை.

இந் நிலையில் எமது விரைவுப் படகை கரைக்கு போகும்படியும் தாங்கள் பிரச்சினையை கடற்படையினருடன் கதைத்து சீர்செய்து போராளிகளையும் வள்ளத்தையும கரைக்கு கொண்டு வந்து தருவதாக யாழ். கண்காணிப்புக் குழுவினரால் கிளிநொச்சி அரசியல் தலைமைப் பணிமனைக்கு உறுதிமொழி வழங்கப்பட்டது.


நணபகலில் டோறா அருகில் வந்த போது விரைவுப்படகில் இருந்து முன்னணி பாதுகாப்பு ஆயுதம் மீன்பிடி வள்ளத்தில் கழறறி வைக்கப்பட்ட பின்பே விரைவுப்படகு டோறாவுக்கு அருகில் சென்று விவரத்தை கூறியிருந்தது மாலை கண்காணிப்புக்குழுவினர் வந்த பின்பு அவர்கள் விரை வுப் படகை வள்ளததிற்கு அருகே செல்ல அனுமதிக்காததால் ஆயுதத்தை வள்ளதிலேயே விடடுவிட்டு இரவு எமது படகு கரைக்கு வந்துவிட்டது, மீன்பிடி வள்ளம் தொடர்ந்தும் அவ்விடத்திலேயே நங்கூரம் இட்டு நின்றது.

07.02.2003 அன்று காலை மீண்டும் மீன்பிடி வள்ளத்தை காண் காணிப்புக் குழுவனர் சோதனையிட்டனர். அதன் போது வள்ளத்திலிருந்த விரைவுப் படகின பாதுகாப்பு முன்னணி ஆயுதத்தை கண்டு விளக்கம் கேட்டபோது, வள்ளத்தில் நின்றவர்களினால் விபரம் கூறப்பட்டது. அதை அவர்கள் ஏற்றுக கொண்டனர். அது விரைவுப் படகின் முன்னணி ஆயுதம் என்பது ஸ்ரீலங்கா கடற்படையினருக்கும் தெரியும்.

தொடர்ந்து பெய்த மழையினால் கரைக்கும் வளளத்திற்குமான வானொலித தொடர்பு காலை 8.30 மணியளவில் தடைப்பட்டது. இதற்கு பின்னர் மீண்டும் கரையிலிருந்த எமது விரைவுப்படகு வள்ளத்தை நோக்கிச் சென்றவேளை, டோறாவில் நின்ற கண்காணிப்புக் குழுவினர் கிளிநொச்சி தலைமைப் பணிமனைக்கு காலை 10 மணியளவில் எமது விரைவுப்படகைத் திருப்பி அழைக்குமாறும் தாங்களே வள்ளத்திற்கும் எங்களுக்குமான தொடர்பினை ஏற்படுத்தித்தருவதோடு நிலைமையை சீர்செய்த மூன்று போராளிகளையும் வள்ளத்தையும் கடற்படையினர் தம்மோடு குறிகட்டுவானுக்கு அழைத்துச் செல்லாதவாறும் எம்மிடம் மீளப் ஒப்படைப்பதாகவும் காலை 11 மணிக்கு தலைமைப் பணிமனைக்கு ஊடாக எமக்கு அறிவித்தனர். காலை 8.30மணியளவில் எமக்கும் வள்ளத்திற்குமான தொடர்பு துண்டிக்கப்பட்ட நிலையில கண்காணிப்புகுழுவினரின் உறுதிமொழியல் முழுமையான நம்பிக்கை வைத்து வள்ளத்தையும் அவர்கள் பொறுப்பில் விட்டுவிட்டு எமது விரைவுப்படகு கரைக்குத் திரும்பி விட்டது.

இந்நிலையில் அங்கு நடைபெற்ற சம்பவங்கள் யாவு ம் கண்காணிப்புக்குழுவினருக்கு மட்டுமே தெரியும் மீண்டும் மதியம் 1.30 மணியளவில் கண்காணிப்புக்குழுவினர் கிளிநொச்சி தலைமைப் பணிமனைக்கு ஸ்ரீலஙகாவின் நேரப்படி 12.45 மணியளவில் போராளிகள் தம்மை வள்ளத்தோடு சேர்த்து தீயிட்டு கொளுத்திவிட்டதாக தெரியப் படுத்தினர்.

இச்சம்பத்தில் எமது போராளி கள் மூவர் வீரச்சாவடைந் துள்ளனர். இவர்களுக்கு வடுதலைப் புலிகள் வரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது. (உ)









நெடுந்தீவுக் கடலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துயரச் சம்பவத்தை ஒட்டி, நேற்று யாழ். குடாநாடெங்கும் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டதுடன் கறுப்பு, மஞ்சள், சிவப்பு கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்தன. படங்கள்: க.பவன்

## ஏ-9 வீதி புனரமைப்பு

(கொழும்பு)

யாழ்- கண்டி வீதியின் 92 கிலோ மீற்றர் வரையிலான பகுதியின் திருத்த வேலைகள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் இம்மாதம் ஆரம்பிக்கப்பட வுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையினரால், ஓமந்தையில் இருந்து மிருசுவில் வரையிலான பகுதியே திருத்தப்படவுள்ளது.

ஏ-9 பாதையின் ஒடுபாதை 6 மீற்றர் அகலமாகவும், நடைபாதை 2.4 மீற்றர் அகலம் கொண்டதாகவும் வீதி புனரமைக்கப்படவுள்ளது. (உ-8)

## அரச அதிகாரிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப் பிரதமர் பணிப்பு

(கொழும்பு)

அரசாங்கக கொள்கைகளுக்கு முரணாக நடந்து கொள்ளும் அரச அதிகாரிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரசிங்கா அமைச்சர்களைப் பணித்துள்ளார்கள்.

இத்தகைய அதிகாரிகள் தமது விருப்பத்திற்கேற்ப அரசாங்க கொள்கைளை மாற்றி அமைக்க விடக்கூடாது.

அரச அதிகாரிகள் மக்கள் பயன் பெறும் விதத்தில் அரச கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

இது இவர்களின் கடமை என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா சுட்டிக் காட்டியுள்ளார். (உ-1)

## ஜனவரி மாதத்தில் மட்டும் திலீபன் மருத்துவ மனையில் சுமார் ஆயிரம் பேர் சிகிச்சை

(கிளிநொச்சி)

அளம்பிலில் செயறபட்டுவரும் தமிழீழ சுகாதார சேவையின் தியாகி திலீபன் ஞாபகார்த்த மருத்துவமனையில் கடந்த ஜனவரி மாதம் மட்டும் ஆயிரத்திற்கு அதிகமானோர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

சுவாசப்புற்று நோயாளர்கள் உட்பட பல்வேறு நோயினால் பாதிககப்பட்டவர்களும் இவர்களில் அடங்குகின்றனர்.

இதேவேளை மேற்படி மருத்துவக் குழுவினர் இப்பிரதேசத்தில் மலேரியா நோய்த்தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றதுடன் உளவளம் தொடர்பான பயிற்சிகளையும் வழங்கி வருகின்றனர். (உ-10)

## பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சைக்கு பதியலாம்

(யாழ்ப்பாணம்)

பிளாஸ்ரிக் சித்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் சார்ள்ஸ் விவேகானந்தன் தலைமையில் யாழ். போதனா வைத்தியசாலையில் இம்மாதம் 17ஆம் திகதி தொடக்கம் 28ஆம் திகதி வரையும் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளதாக ஜேர்மன் கெல்த் பவுண்டேசன் நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சைக்கு உட்பட விரும்புபவர்களை எதிர்வரும் 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரையான நாட்களில் வெளிநோயாளர் பகுதியில உள்ள சத்திர சிகிச்சை கூடத்தில் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)




யாழ். பரியோவான் கல்லூரியின் யூபிலி மண்டபத்தில் நேற்று நடைபெற்ற IIS நிறுவனத்தின் 7 வது ஆண்டு விழாவும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் இடம்பெற்றது.

# தமிழர் உரிமை மறுப்பு நாட்டைப் பிளவுபடுத்தும் என்று கூறியவர் அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம்

தமிழ் மக்களின் உரிமைக்காகவும், நலன்களுக்காகவும் உழைத்த தலைவர் அமரர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் சட்டத்தறையில் பிரபல்யம் பெற்ற சட்டத்தரணியாக விளங்கினார். அத்துடன் அரசியலிலும் பிரவேசித்து தமிழர்களின் சமுதாய ஏற்றத்துக்காகவும், கடுமையாக உழைத்தார். 1920 ஆம் ஆண்டில் உயர்நீதிமன்ற சட்டத்தரணியாக பதிவு செய்து கொண்ட அவர், அக்காலத்தில் வெளியிடப்பட்ட டொனமூர் கொமிஷன்சிபார்சுகளினால் ஏற்படஇருக்கும் தீமைகளைச் சுட்டிக்காட்டித் தீர்மானம் நிறைவேற்றினார்.

### தமிழ்க்காங்கிரஸ்

சிறுபான்மையினரை ஒதுக்கும் திட்டமிட்ட சூழ்ச்சியை உணர்ந்து தமிழரைப் பாதுகாக்கும் பொருட்டு 29-08-1944இல் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசை நிறுவச் செயற்பட்டார். 1945இல் தமிழ்க் காங்கிரசின் சார்பில் சோல்பரிக்

**இன்று 26வது நினைவு தினம்**

கமிஷன் முன்தோன்றி, சிறுபான்மையினரின் நிலையை விளக்கியதுடன் பாராளுமன்றத்தில் சமபலம் வேண்டுமென்றுகோரி, சமபிரதிநிதித்துவக்கோட்பாட்டை முன்வைத்தார். ஒரு பெரும்பான்மையினம், சிறுபான்மையினம் மீது ஆதிக்கம் செலுத்தக் கூடாது என்ற அவரின் நோக்கமே இந்தமுனமொழிவு. சோலபரிக் கொமிஷன் சமபிரதிநிதித்துவக் கோட்பாட்டை ஏற்காத போதிலும். பிரிவு 29 போன்ற சில பாதுகாப்புகளை சிறுபான்மையின



ரின் நன்மை கருதி அரசியல் சாசனத்தில் உட்புகுத்த வேண்டுமெனச் சிபார்சு செய்தது.

அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அரசியல் சாசனம் பிரிவு 29 அமுல்செய்யப்பட்டிருந்தால் தமிழர்கள் ஆயுதம் தூக்கியிருக்கமாட்டார்கள் என ஒப்புக் கொண்டிருக்கிறார்.

### தமிழர்களின் உரிமை

தனிச் சிங்களச்சட்டம் பாராளுமன்றத் தில் சமர்ப்பிக்கப்பட்ட போது, அம்மசோதா அமுல்படுத்தப் படடால் நாடு பிளவுபடுமென ஆணித்தரமாக அமரர் பொன்னம்பலம் பாராளுமன்றத்தில எடுத்துரைத்தோடு, இதனால் தமிழர்கள் சுயநிர்ணய உரிமையைப் பாவிக்கவேண்டிய நிலை ஏற்படலாமெனப் பிரித்தானிய அரசிற்குத் தந்திமூலம் அறிவித்தார். 1948ம் ஆண்டு அமுலுக்கு வந்த 18ஆம் இலக்க இலங்கை பிரஜா உரிமைச் சட்டத்தைத் தமிழ்க் காங்கிரஸ் எதிர்த்து வாக்களித்தது இச்சட்டம் மலை நாட்டுத தமிழர்களின் பிரஜா உரிமையைப் பறித்தது. பிரஜா உரிமையை இழந்த இந்திய வம்சாவளியினருக்கு அவ்வுரிமையை மறுபடியும் வாங்கப் பண்டிட்நேருவுடன் கலந்தாலோசித்து ஒரு மசோதாவைக் கொண்டுவர வேண்டுமென டீ.எஸ்.சேனநாயக்காவிடம் வாக்குறுதியைப் பெற்றதன் விளைவாகவே இந்திய -பாகிஸ்தானிய வதிவிடச் சட்டத்தை டீ.எஸ்.சேனநாயக்கா கொண்டுவந்தார். இச்சட்டத்தின் பிரகாரம் ஏழுவருடங்கள் இலங்கையில் வசித்த விவாகம் செய்த இந்தியருக்கும், பத்து வருடம் இலங்கையில் வசித்த விவாகம் செய்யாத இந்தியருக்கும் பிரஜா உரிமையைப் பெறமுடியும். இச்சட்டத்தையே ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஆதரித்தார். இதனைச் சிலர் தவறாகப் புரிந்து கொண்டனர்.

### பகிஷ்கரிப்பினால் ஏற்பட்ட விளைவு

இந்திய வம்சாவளியினர் பிரஜா உரிமைபெறாததற்கு யார்காரணம், பிரஜாவுரிமை பெறவிரும்புவோர் மசோதா நிறைவேறி இரண்டு வருடங்களுக்குள் விண்ணப்பம் செய்ய வேண்டும் என்பது இந்திய -பாகிஸ்தானிய வதிவிடச் சட்டத்தின் 5 ஆவது பிரிவில் காணப்படும் நிபந்தனையாகும். இதன்படி பிரஜா உரிமை பெறாமைக்குப் பகிஷ்கரிப்புச் செய்தவர்களே காரணம். இலங்கை இந்தியக் காங்கிரசும் தமிழ்க்காங்கிரசும் ஒரு முன்னணி அமைத்து ஒரு கொடியின் கீழ் 1947 ஆம் ஆண்டுத் தேர்தலில் போட்டியிடவேண்டுமென அமரர் தெரிவித்த யோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தால் இன்று தமிழினத்தின் நிலை வேறு விதமாக இருந்திருக்கும்.

**அ. விநாயகமூர்த்தி பா. உ**

1948ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது சுதந்திரதின விழாவில் நந்திக் கொடியையும் ஏற்றிய பெருமை ஜீ.ஜீ.பொன்னம்பலத்தையே சாரும். பாராளுமன்றத்தில் முதன்முறையாகத் தமிழில் உரையாற்றிய பெருமையும் அவருக்குரியதே. அவர் 1976இல் இந்திராகாந்தியினால் கருணாநிதியின் அரசு கலைக்கப்பட்டபோது, சர்க்காரியா கமிஷன் முன்தோன்றி கருணாநிதி சார்பாக வாதாடினார்.

அவரின் 26வது சிரார்த்த தினத்தில் அன்னாரை நினைவு கூருவோம்.

## அரசின் அழைப்பை ஏற்று பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் மார்ச்சில் வருகிறார்

(கொழும்பு)

பிரிட்டனின் வெளிவிவகார அபிவிருத்தி அமைச்சர் கிளையர் ஷோட், இலங்கை அரசாங்கத்தின், விசேட அழைப்பின் பேரில் எதிர்வரும் மார்ச் மாதம் 5, 6ஆம் திகதிகளில் இலங்கையில் தங்கி பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

இலங்கையின் பொருளாதார மறுசீரமைப்பு, விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொடபேர்ளின் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள சென்றபோது புதன்கிழமையன்று லண்டனில் கிளையர் கோட்டை சந்தித்து இதற்கான அழைப்பை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அமைச்சர் இங்கு தங்கி இருக்கும் நாட்களில் இலங்கையின் சமாதான முன்னெடுப்புகள் குறித்து அரசியல பிரமுகர்கள் பலரையும் சந்தித்து பேசவுள்ளார். (உ)

## மேன்முறையீட்டு நீதிமன்ற புதிய தலைவராக ஷிராணி

(கொழும்பு)

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் புதிய தலைவராக மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் திருமதி ஷிராணி திலக வர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய தலைவரை கௌரவிக்கும் உத்தியோகபூர்வ வைபவம் எதிர்வரும் 14 ஆம்திகதி வெள்ளிகிழமை மு.ப. 10.00 மணிக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளது.

மேல் நீதிமன்ற நீதிபதியாக கடமையாற்றிய காமினி ஏ.எல். அபயரத்ன மேன்முறையீட்டு நீதிமன்ற நதியரசராக பதவியுயர்வு பெற்றுள்ளார். இவரைக் கௌரவிக்கும் வைபவும் ஒன்றாக இடம்பெறவுள்ளது. (உ)

## சமஷ்டியை அமுல் செய்வதில் அரசு சவால்களை எதிர்கொண்டுள்ளது

### டிரோன் லண்டனில் தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு தீர்வு




காணும் முகமாக முன்வைக்கப்பட்ட சமஷ்டி ஆட்சி முறையினை எவ்வாறு மாற்றியமைத்து அரசியல் யாப்பு சட்ட வரம்புக்குள் சேர்ப்பது என்பதுதான் தற்போதைய அரசியலின் பிரதானமான சவலாக உள்ளது.

இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னான்டோ இலண்டன் பொருளாதாரப் பல் கலைக்கழகத்தில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

அமைச்சர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில்,

இந்த சமஷ்டி தீர்வினை அனைத்து சமூகங்களும் அனைத்து அரசியல் கட்சிகளும் ஏற்றுக் கொள்ளும் என்ற நம்பிக்கை உண்டு.

சமஷ்டி ஆட்சி முறையின் வாய்பபுகள் குறித்து ஆராய அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் இணங்கியுள்ளனர்.

சிங்கள, முஸ்லிம் மக்கள் சமாதான முன்னெடுப்புக்களுக்கு ஆதரவு வழங்குவதில் தான், சமாதான முயற்சிகளின் வெற்றி தங்கி இருக்கிறது என்பதை அரசாங்கம் நன்கு உணர்ந்துள்ளது.

எனவே சகல சமூகங்களுக்கும் சமாதானம் தொடர்பான விளக்கங்களை அளிக்கும் முயற்சிகளில் அரசாங்கம் தற்போது ஈடுபட்டு வருகின்றது என்று குறிப்பிட்டார்.

மேலும் அரசாங்கத்தின் இந்த முயற்சிகள் பாராட்டுக்குரியன., பாமர மக்களும் சமாதானம் தொடர்பான முடிவுகளையும் விளக்கங்களையும் அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது எனவும் சுட்டிக் காட்டினார். (உ-8)

# செய்தித்துளிகள்

## திருவிழா

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை கிழக்கு புனித அந்தோனியார் ஆலயத்திலுள்ள கெவியில் எதிர்வரும் 11ம் திகதி செவ்வாய்க் கிழமை மாலை 5.00 மணிக்கு புனித -லூர்து அன்னை திருவிழா ஊர்காவற்றுறை பங்குத் தந்தை அருட்திரு ஞானபபிரகாசம் அடிகள் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ)

## வருடாந்த உற்சவம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கொட்டடி சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 21ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம் பமாகவுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி இரதோற்சவமும் இரண்டாம் திகதி கடல் தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளது. (உ-52)

## கந்தபுரர்ணம் படிப்பு

(பருத்தித்துறை)

தென்புலோலி சின்னத்தாய்ப் பிள்ளையார் ஆலயத்தில் கந்தபுராணப்படிப்பு ஆரம்பமாகியுள்ளது.

கடந்த 6ம் திகதி ஆரம்பமான இக கந்தபுராணப்படிப்பு தொடர்ந்து மூன்று மாதங்கள் நடைபெறவுள்ளது. (உ-52)

## திருச்சொரூப சுற்றுப்பவனி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை தும்பளை லூர்த்து மாதா தேவாலய திருச்சொரூப சுற்றுப்பவனி நாளை திங்கள்கிழமை 10 திகதி நடைபெறவுள்ளது.

கடந்த 2 ஆம் திகதி கொடியேற்றத்துடன் இத்தேவாலய திருவிழா ஆரம்பமாகியது (உ-52)

## விபத்தில் படுகாயம்

(யார்க்கரு)

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் இராணுவக் காவலரணினுள் பாய்ந்ததினால் படுகாயமடைந்த ஒருவர் யாழ். போதன வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் இமையாணன் புறாப் பொறுக்கிச் சந்தியில் இச்சம்பம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் யாழ். மின்சார சபையில் சாரதியாக பணியாற்றும் இமையாணன் மேற்கு உடுப்பிட்டியைச் சேர்ந்த தங்கவடிவேல் உதயகுமார் (வயது40) என்பவரே காயமடைந்தவராவர். (உ-31)

## இரவு நேரத்தில் பாடபோதனை

(கொழும்புத்துறை)

பாசையூர் பகுதி மாணவர்களின் நன்மை கருதி புனித அந்தோனியார் மகளிர் பாடசாலை மண்டபத்தில் இரவு நேர வகுப்புக்கள் வியாழன் தொடக்கம் நடைபெற்று வருகின்றது.

அருட்தந்தை யேசுரட்ணம் தலைமையில் நடைபெறும் இவ் விசேட வகுப்புக்களில் தரம 6 தொடக்கம் தரம் 11 ஆண்டு வரையான மாணவர்களுக்கு இப்பகுதி இளைஞா யுவதிகளால் பாடங்கள் கற்பிக்கப் படுகின்றன. (உ-51)

## வீம ஏகாதசி திருவிழா

(பருத்தித்துறை)

சரித்திரப்பிரசித்திபெற்ற வடமராட்சி அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் எதிர்வரும் 13ஆம் திகதி "வீம ஏகாதசி" திருவிழா நடைபெறவுள்ளது. (உ-52)

## நிர்வாக சபை தெரிவுக் கூட்டம்

(கல்வயல்)

தென்மராட்சி பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்க நடப்பு ஆண்டுக் கான புதிய நிர்வாகசபைத் தெரிவுக் கூட்டம் நாளை திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலகத்தில் தலைவர் பொ. பிரபாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-36)

## தபால்பெட்டி புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதான சந்தியில உள்ள சேதமுற்ற தபால் பெட்டி புனரமைப்பு செய்யப்பட்டு மக்கள பாவனைக்கு விடப்பட்டுள்ளது. (உ)

## பனங்கள்ளு தாராளம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறைப் பகுதியில் பனங்கள்ளுச் சீசன் ஆரம்பமாகியுள்ளது.

அத்துடன் கள்ளை போத்தலில் அடைக்கும் தொழிற்சாலை நாரந்தனை செருக்கன் சந்தியில் இயங்கி வருகின்றது.

இதேவேளை கள் விற்பனை அதிகரித்துள்ளதால் சாராய விற்பனை குறைந்துள்ளது. (உ)

## புனரமைப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி தேநீர்ச்சாலை சுமார் ஒரு இலட்சம் ரூபா செலவில் நவீன முறையில் புனரமைக்கப்படவுள்ளது.

கல்லூரியின்பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் நிதி உதவியுடன் இப்புனரமைப்பு இடம்பெறவுள்ளது. (உ-52)

## புதிய அதிபர் நியமனம்

(பருத்தித்துறை)

அல்வாய் அம்பாள் வித்தியாலய அதிபரக, பருத்திததுறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை வர்த்தகத்துறை ஆசிரி யராக கடமையாற்றிய எஸ்.ஏ. தேவச்சந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். (உ-52)

## கையெழுத்துச் சஞ்சிகை

(கொழும்புத்துறை)

திருமறைக் கலாமன்ற இளைஞர் அவையின் ஏற்பாட்டில் "விடலை" என்ற கையெழுத்துச் சஞ்சிகை வெளியிடப்படவுள்ளது.

இளைஞர்களின் ஆற்றலை வெளிப்படுத்தும் வகையில் "ஓவியா" என்ற சித்திரம்சார் கையெழுத்துச் சஞ்சிகை ஒன்றும் தயாரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது (உ-51)

## ஜே.வி.பியின் விழிப்புணர்வுத் திட்டம்

(கொழும்பு)

தற்போதைய நாட்டு நிலை குறித்தும் சமாதான முயற்சி தொடர்பாக மக்களை விழிப்புறச் செய்வதற்காகவும் நேற்று முதல் இம் மாதம் 21ஆம் திகதி வரை விழிப்புணர்வுத் திட்டம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளதாக ஜே.வி.பி அறிவித்துள்ளது.

அதேவேளை, தற்போது நடைபெற்றுவரும் அரசுக்கும் - தமிழீழ விடுதலைப்புலிகளிற்கும் இடையிலான பேச்சுவார்த்தைக்கு தாம் ஒருபோதும் ஆதரவளிக்கப் போவது இல்லை எனவும் ஜே.வி.பியினர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (உ-10)

# பிறந்த திகதிக்குப் பொருந்தப் பெயரமைத்து சிறந்ததாக வாழ்க்கையைச் சீர் செய்யுங்கள்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

### உடல்எண் 6 கூட்டுஎண்ணாகிய உயிர் எண் 6

6,15,24 போன்ற திகதியில் பிறந்து, திகதி, மாதம்,வருடம் ஆகிய மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண்6 வருமேயானால இவர்கள் பூரண சுக்கிர ஆதிக்கத்தில் பிறந்தவராவர். இவர்கள் பார்ப்பதற்கு அழகாகவும், நிதானமுடையவராகவும் காட்சியளிப்பர். எதையும் சிந்தித்துச் செயல்படும் மனிதராவர்.உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று கூறாது தன்மனதில் தோன்றிய கருத்துக்களை தெளிவாக எடுத்துக் கூறுவர்.எல்லோரும் நலமாக வாழ வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். தனது முன்னேற்றத்தில் கண்ணும் கருத்துமாயிருக்கும் இவர்கள்ஒவ்வொரு மனிதனும் உயர்ந்தால் நாடு தானாக உயரும் என்ற எண்ணம் கொண்டவர்.

இவாகள் பிறந்த திகதிக்கு பொருததமானதாக பெயர் அமைந்து விட்டால் வாழ்க்கையில் உச்ச ஸ்தானத்தில் அடைவர்.இந்த எண்ணிக்கையில் பிறந்த பலர் ஞானமுள்ளவராகவும்,தர்ம சிந்தனை படைத்தவர்களாகவும், பலருக்குஅறிவுரை கூறுபவர்களாகவும் இருப்பதோடு பெரும் செல்வந்தராக வாழ்வர். ஆனால் பெயர் பொருத்தமின்றி இருந்தால் முன்னேற்றம் அவ்வளவு சிறப்பாக இருப்பதில்லை.எங்கு சென்றாலும் போட்டியும் பொறாமையும் சந்திக்க நேரிடுகின்றது.இதனால் பெயரைப் பிறந்த திகதி எண்களுக்குப் பொருத்தமானதாக அமைத்துக் கொள்வது அவசியம். இளகிய மனம் கொண்ட இவர்கள் பிறருக்கு உதவுவதாலும் சமூகசேவை செய்வதாலும்மக்களிடத்து மதிப்புள்ள மனிதராக விளங்குவர்.

சிலர் இயற்கையிலேயே வசதி படைத்தவர்களாக இருந்தாலும் பெயர் நன்றாக அமையாவிட்டால் மனம் குழம்புவர்.எந்த ஒரு பிரச்சினை வந்தாலும்,சிறிது நேரம் சிந்தித்து உடனே முடிவெடுக்கும் ஆற்றல் பெற்றவர். இவர்களுடைய எண்ணங்கள் மின்னல் வேகத்தில் செல்லக் கூடியன. இந்த உலகத்தில் உள்ள நன்மைகள் எல்லாம் நாம்அனுபவிப்பதற்காக உருவாக்கப்பட்டவையே என்று கூறுவர். இதனால் இவர்களைச் சுகபோகத்தை பூரணமாக் அனுபவிக்கும் மனிதர் என்று சொல்லலாம். தத்துவம், மதம்,சட்டம்,கணிதம் சாஸ்திரம் போன்றவற்றை ஆராய்ச்சி செய்வர். பசுமையான இடங்களையும், இயற்கையான சூழ்நிலைகளையும், மலைப் பிரதேசங்களையும்,கண்டுகளிக்க ஆசைப்படுவர். இவர்களது பிறந்த திகதிக்கு பொருத்தமானதாகப் பெயா அமைந்து விடுமானால் இந்த உலகில் அனுபவிக்க வேண்டிய எல்லாவிதமான பாக்கியங்களையும் அனுபவித்து வாழ்வர்.

ஆனால் பிறந்த திகதிக்கு பொருத்தமற்ற நிலையில் பெயர் இருக்குமேயானால் இவர்களது நிலை தலை கீழாக மாறி விடும். நாட்டியம், இசை,போன்றவற்றில் கலை ஞானம் கொண்ட இவர்கள் எல்லோரையும் மகிழ்விக்கக்கூடிய காரியங்களைச் செய்து புகழ் அடைவர்.இவர்களுக்கு மனக் கட்டுப்பாட்டால் வரக்கூடிய சித்திகள் கைகூடும். ஆண்டவனை வழிபடுதலில் ஆர்வம் கொண்டவர்களாக இருப்பர். அழகான வீடு கட்டுவதும், தோட்டம்அமைப்பதும் புதிது புதிதாக ஆபரணம்செய்வதிலும் விருப்பம் உடையவர்கள்.

வாசனைத்திரவியங்கள் என்றால் இவர்கள் மனதைக்கவரும். பெயர் பொருத்தமானதாக அமையப் பெற்றவர்கள் நல்ல வாழ்க்கைத்துணை, நல்ல ஆரோக்கியம்,நல்ல குழந்தைகள், நல்ல செல்வம் ஆகியவற்றைப் பெற்றுச் சிறப்பாக வாழ்க்கை நட த்துகின்றனர். உத்தி யோகம் பார்க்கும் சிலருக்குப் பெயா பொருத்தமானதாக அமைந்து விட்டால் படிப்படியாக உயர்ந்த ஸ்தானத்தை அடைவர். ஆனால் பெயர் பொருத்தமற்ற நிலையில் இருந்தால் பல்வேறு குழப்பத்துக்கு ஆளாவர். இதனால் பெயரைத் தமது பிறந்த திகதிக்குப் பொருத்தமாக் மாற்றி அமைத்துக் கொள்வது அவசியம்.

### தொழில்

இவாகள் ஆடம்பரம் சம்பந்தமான பொருடகளை வியாபாரம் செய்வதாலும்,அழகு சாதனங்கள், ஆபரணங்கள், இரும்பு சம்பந்தமான தொழில், ஜவுளி, மருந்துப்பொருட்கள் பச்சைப் பொருள்கள் போன்றவற்றாலும் உயர்வடைய வாய்ப்புள்ளது.

### நோய்

இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு உஷ்ண சம்பந்தமான வியாதிகள், இரத்த அழுத்தம், சிறுநீர்க் கோளாறு பல்வலி,முதுகுவலி போன்ற வைகள் வந்து நீங்கும்.

### பெயர் அமைக்கும் முறை

இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு சுக்கிரனின் பூரண பலன் இருப்பதால் சூரியன், செவ்வாய், சுக்கிரன்போன்ற ஆதிக்கத்தில் பெயர் வைக்கலாம். மேற்குறிப்பிட்ட ஆதிக்கமான 19, 37,46,64, 27,36,45,15,24,33,42,60,69 உள்ள எண்களில் பெயர் அமைவது சிறப்பாகும்.

### பின்பற்ற வேண்டியவை

யோகமான எண்-1,6, யோகமான திகதிகள்- 1,10,19,28,6,15,24, 9,18,27, யோகமான நிறம் -பச்சை வெளர்நீலம். யோகமான மோதிரக் கல்- மரகதம்ஆகாத திகதிகள் -3,12,21,30, ஆகாத நிறம் -றோஸ், ஆரஞ்சு, கத்தரிப்பூ நிறம்.

### உடல் எண் 6~கூட்டு எண்ணாகிய உயிர் எண் 7

6,15,24, போன்ற திகதிகளில் பிறந்து இவர்களது திகதி, மாதம் வருடம் ஆகிய இம் மூன்றையும் கூட்டிவருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண்7 வருமேயானால் சுக்கிரன், கேது ஆதிக்கத்தில் பிறந்தவராவர். இவர்கள் பார்ப்பதற்கு ஓரளவு உயரமானவர்களாகவும் கண்ணியமான மனிதராகவும் காட்சியளிப்பர். மற்ற 6 எண்காரர்களைப் போல் இல்லாது நாசூக்காகவும் ஆடம்பரமின்றியும்,அதிக கலகலப்பாகப் பழகாது வார்த்தைகளை மிகவும் நிதானித்து உபயோகிக்கக் கூடியவர்களாகவும் இருப்பர். சில நேரங்களில் வாதம் செய்கின்ற போது காரசாரமாகப் பேசுவர். தனிமையில் இருந்து கொண்டு சிந்தனை செய்வர்.

இந்த எண்ணிக்கைக் காரர்களுக்கு சங்கீதம்,தத்துவம் போன்றவற்றில் மிகுந்த ஆர்வம் இருக்கும்.ஆள் நடமாட்டம் இல்லாத இடங்களையும்,மலைப் பிரதேசங்களையும், நீர்த்

**சோதிட பலன்**

தேக்கங்களையும் கண்டு களிக்க ஆசைப்படுவர். பிறருக்கு உதவுவதன்மூலம் தன் தகுதியை உயாத்திக்கொள்ள ஆசைப்பட மாட்டார். தன்னால் இயலாத-காரியத்தை முடியும் எனக் கூறமாட்டார். முன் பின் சிந்தித்தே செயற்படுவா். அதீ தமான ஆள் நடமாட்டம் உள்ள இடத்தில் வாழ்வதைவிட,தனிமையானஇடதநில் அமைதியாக வாழ ஆசைப படுவா.

இவர்களுக்குப் பெயர் எண்பொருத்தமானதாக அமையுமேயானால் வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைவதோடு வீடு வாகனம்,நிலம் போன்றவைகளை பெற்றுச் சுகமாக வாழ்வர்.இவர்களது மன நிலையை யாரும் எளிதில் புரிந்து கொள்ள முடியாது எதையும் எளிதில் வெளியில் கூறமாட்டார்.சில நேரங்களில் எதையோ இழந்ததைப்போன்று காட்சியளிப்பர். பிறந்த திகதிக்குப் பொருத்தமான பெயர் அமையப் பெற்றவர்கள் நல்ல ஆரோக்கியம், நல்ல வாழ்க்கைத்துணை, நல்ல குழந்தைகள்,நல்ல செல்வம் பெற்று வாழ்கின்றனர்.ஆனால் பிறந்த திகதிக்குப் பொருத்தமற்ற பெயர் அமையுமேயானால் இவர்களுக்கு ஏதாவது ஒருகுறை இருந்து கொண்டே இருக்கும். குழப்பத்துடனே வாழ்ந்து கொண்டு இருப்பர். எழுதுவதாலும், ஆடம்பரப் பொருடகளை விற்பதாலும் இலாபம் பெறும் பாக்கியம் உள்ளவர்கள்.சட்டம் சமயம், தத்துவம், கணிதம்,சோதிடம் போன்றவற்றில் ஆர்வம் இருக்கும் எப்போதும் எதையாவது சிந்தித்துக் கொண்டிருக்கும் இவர்களுக்கு தனிமையில் புதுப்புது கருத்துக்கள் மனதில் தோன்றும்.இவர்கள் பிறந்த திகதிக் குப் பொருத்தமான பெயர் அமையுமேயானால் வாழ்க்கையில் படிப்படியாக முன்னேற்றம் அடைவர். ஆனால பிறந்த திகதிக்குப் பொருத்தமற்ற பெயர் இருக்குமேயானால் இவர்களுடைய முன்னேற்றம் தடைப்படும். வாழ்க்கை போராட்டம் அமைந்ததாக இருக்கும். இதனால் பெயரைப் பிறந்த திகதி எண்களுக்குப் பொருத்தமானதாக அமைத்துக் கொளவது அவசியம்.

சந்தோஷமான சூழ்நிலையில் சகஜமாகப் பழகும் இவர்கள், சிறிது மனக்கஷ்டம், இருந்தால் நண்பர்களுடன் கடிந்து விழுவர் .புதுமையும்பழமையும்கலந்து வாழ்க்கை நடத்தும் இவர்கள் எப்பொழுதும் ஒரு நிலையான எண்ணத்துடன்

**ஆர் .ஐ. துரைமுருகர்**

இருக்கமாட்டார்கள். இவர்களுக்கும் எப்பொழுதும் தான் சொல்லுவதைச் செயவதற்குஒரு உதவியாள் இருக்க வேணடும் என எண்ணுவர். வீட்டை அலங்கரித்து வைதது்க் கொள்வதிலும்,தோட்டம் போடுவதிலும் ஆர்வம் உடையவர்கள்.

ஆண்டவனை வழிபடுவதை அதிக நம்பிக்கை கொண்ட இவர்கள் சமயத் திற்கும்,தெய்வ வழிபாட்டிற்கும் என்ன சமபந்தம் என ஆராயத் தொடங்குவர்.பொதுவாக இந்த எண்ணிக்கைக்காரர்கள் நல்ல ஆராய்ச்சி மனப்பான்மை கொண்டவர்களாக இருப்பதால் தமது பிறந்த திகதிக்குப் பொருத்தமான பெயரை அமைத் துக் கொண்டால் சீரும் சிறப்புமாக வாழலாம்.

### தொழில்

எழுதுவதாலும், பேசுவதால்ும் பொருளீட்டுவர். ஆடம்பரம் சம்பந்த மான பொருள் ,வாகனம், பச்சைப பொருள், ஜவுளி போன்றவற்றாலும வாழ்க்கையில் முன்னேற்றம் காண்பர்.

### நோய்

இவர்கஞ்க்குமனக் குழப்பம் சம்பந்தமான நோய் மூட்டுவலி, கண் நோய், முதுகுவலி, வாயுக்கோளாறு, முதலியன வந்து நீங்கும்.

### பெயர்அமைக்கும்முறை

சுக்கிரன், கேது ஆதிக்கத்தில் பிறந்த இவர்களுக்கு சூரியன், சுக்கிரன், ஆதிக்கமான 19,37 46,64,15,24,33,42,60,69போன்ற எண்களில் பெயர் அமைத்துக் கொள்ளலாம்.

### பின்பற்றவேண்டியவை

யோகமான எண்-6,2 யோகமான திகதிகள்-6,15,24,2, 11,20,29 யோகமான நிறம்-பச்சை வெளிர் நீலம் வெளிர் மஞ்சள். யோகமான மோதிரக்கல்-மரகதம், ஜேட், ஆகாத திகதிகள் 3,12,21,30, 9,18,27, ஆகாத நிறம் றோஸ் ஒரோஞ், சிவப்பு கத்தரிப்பூநிறம்.

(தொடரும்)

---

## விளையாட்டுப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யா/தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர் வரும் 12ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 2.00 மணிக்கு மேற்படி பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில்நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் வ.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சிக் கல்விப் பணிப்பாளர் தி. செல்வரத்தினம் கலந்து கொள்ளவுள்ளார். (உ-10)

* * *

(யாழ்ப்பாணம்)

அராலி வடக்கு இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப.1.00 மணிக்கு அதிபர் மோகனநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கலந்து கொள்ளவுள்ளார். (உ-214)

* * *

(பருத்தித்துறை).

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்களஉயர் தரப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அதிபர் திருமதி சு.செல்வமலர் தலைமையில் எதிர் வரும் 12ஆம் திகதி நடைபெறவுள்ளது.

யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.மகாலிங்கம் நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.(உ-52)

* * *

(பருத்தித்துறை)

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி, அதிபர் வி.சிவசிதம்பரம் தலைமையில் எதிர் வரும் 16ஆம் திகதி நடைபெறவுள்ளது.

நிகழவில் யாழ். தபால் அத் தியட்சகர் எஸ். சிவராஜசிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (உ-52)

## கட்டடவேலை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் புனர்வாழ்வு,புனரமைப்பு ,மீள் குடியேற்ற அமைச்சினால் அமைக்கப்பட்டு பின்னர் இடைநிறுத்தப்பட்டகடைத்தொகுதிக் கட்டட வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன. (உ)

---

## சாட்சியமளிக்கச் செல்லத் தவறும் பொலிஸாரை விசாரிக்க விசேட பிரிவு

(கொழும்பு)

நதிமனறங்களுக்கு,வழக்கு விசாரணைகள் தொடர்பாக உரிய நேரத்தில் சாட்சியமளிக்கச் செல்லத் தவறும் பொலிஸார் பற்றிய விசாரணைகளை மேற்கொள்ள விசேட பரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றங்களில் ஏற்கனவேயுள்ள வழக்குகள் தொடர்பாக உரிய நேரத்தில் சாட்சியங்கள் எவையும் பொலிஸ் தரப்பில் சமர்ப்பிக்கப படுவதில்லை.

ஆகையால்,குற்றச் செயல்களுடன் தொடர்புடைய பலர் தப்பித்துக கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது.

இதனால் முறைப்பாட்டாளருக்கு பாதிப்பு ஏற்படுவதுடன், குற்றச் செயல் களும அதிகரிக்கின்றன.

அண்மையில், இவ்வாறான வாய்ப்புகளைப பயன்படுத்தி மஹியஙகனைப் பகுதியல் 12 சந்தேக நபர்கள் விடுதலை செய்யப்பட்டிருந்த தும் குறிப்பிடத் தக்கது. (உ-8)

## தமிழ் கணனிக் கண்காட்சி இன்றும் இடம்பெறுகிறது

(யாழ்ப்பாணம்)

சென்னையில் இயங்கும் வள்ளி மென்பொருள் நிறுவனமும், கொழும்பு, சைபாமெஹா நிறுவனமும இணைந்து நாடளாவிய ரீதியில் நடத்திவரும் "தமிழ் கணனிக் கண்காட்சி - 2003" நேற்று யாழ். மத்தியகல்லூரியில் ஆரம்பமானது.

கணனியில் தமிழைவளர்கும் முயற்சியாக இத் தமிழ் கணனிக் கண்காட்சி இருநாட்கள் யாழ்ப் பாணத்தில் இலவசமாக நடத்தப் படுகின்றது.

கணிப்பொறியில் தமிழில் எழுத - தமிழால் எழுதஅறிமுகப்படுத் தப்பட்டுள்ள தமிழ் கணனித் தட்டெழுத் தான "சங்கப் பலகை" இக் கண் காட்சியின் சிறப்புஅம்சமாகும்.

இக்கண்காட்சி இன்றும் நடை பெற வுள்ளது குறிப்பிடத்தக்கது. (உ-3)

## பெயர் மாற்றம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு ப.நோ. கூ.சங்கத்தால் வடிவமைக்கப்பட்டு சேவைய்யில ஈடுபட்டு வரும் சமுத்திராதேவா படகின் பெயர் சமுத்திராதேவி எனப் பெயர் மாற்றப் படவுள்ளது.

இது தொடர்பாக புதிதாக தெரிவு செய்யப்பட்ட இயக்குநர் சபையின் முதலாவது கூட்டதில் தீர்மானிக்கப் பட்டுள்ளது. இப்பெயர் மாற்றம் எதிர் வரும் ஓகஸ்ட் மாத்தில் மேற்கொள்ளப் படவுள்ளது. (உ-126)

## நெடுந்தீவு சம்பவம் குறித்து இராணுவப் பேச்சாளர் அறிக்கை

(கொழும்பு)

நெடுந்தீவு கடற்பரப்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவம் குறித்து இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் எஸ்.ஜி கருணாரட்ண அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையின் விபரம் வருமாறு,

கடந்த 6ஆம் திகதி நெடுந்தீவுவின் தெற்குக்கடற்பரப்பில் இலங்கைக் கடற்படையின் அதிவேகத் தாக்குதல் படகு வழக்கமான கண் காணிப்புப் பணியில் ஈடுபட்டு கொண்டிருநதது.

அப்போது, பிற்பகல் 2.00 மணியளவில் விடுதலைப் புலிகளின் படகு ஒன்று ட்றோலர் படகொன்றைக் கட்டி இழுத்துச் செல்வதைக் கடற்படையினர்அவதானித்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் படகில் 10 ஆண்களும் 2 பெண்களும் இருந்தமையும் ட்றோலர் படகில் மூன்று ஆண்கள் இருந்ததையும் கடற்படையினர் அவதானித்தனர்.

இலங்கைக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளின் பிரசன்னத் துடன்,விடுதலைப் புலிகளின் படகைச் சோதனையிட இலங்கைக் கடற் படையினர் சில தடவைகள் முயற்சித்த போதும அவை தோல் வியடைந்தன.

பின்னர் கண்காணிப்புக் குழுவின் ஆலோசனையின் பேரில் விடுதலைப் புலிகளின் படகும் 12 புலிப் போராளிகளும் வடுவிக்கப்பட்டனர்.

விடுதலைப் புலிகளின் படகில போர்த் தளபாடங்களோ அல்லது வெடிப் பொருட்களோ இல்லை என்று கண்காணிப்புக்குழு உறுதிப் படுத்தியது.

ஆயினும், ட்றோலரை மேலிடத்து உத்தரவு வரும்வரை கண்காணிப்புக் குழுவினரால் சோதனையிட முடியவில்லை

கடநத 7 ஆம் திகதி காலையில் இலங்கைக் கடற்படையினர் அனுமதிக்கப் படாத நிலையில் ட்றோலர் படகை கண் காணிப்புக் குழுவின்சோதனையிட்டனர் .

இதில், 23 மில்லி மீற்றர் சுடு குழல் ஒனறும்23 மில்லிமீற்றர் துப்பாக்கியின் பிளந்த பகுதி ஒன்றும் 23 மில்லி மீற்றர் ரவை கள் இரண்டு பெட்டிகள், ஏ.கே 7 துப்பாக்கி ஒன்று, கைக் குண்டுகள் 3, 23 மில்லி மீற்றர் ஆயுதத்தின சில உதிரிப்பாகங்கள் மற்றும் சங்கிலித் தொடுப்பு, வானொலி தொலைத் தொடர்புக்கருவிஒனறு ஆகியவை கண்டு பிடிக்கப்படடன.

அதன பின்னர் படகிலிருந்து விடுதலைப் புலிகள் கண்காணிப்புக்குழு உறுப்பினர்களை ட்றோலர் படகிலிருந்து குதித்து வரும்படி கேட்டுக கொண்டனர் அத்துடன், ட்றோலர் படகுக்கு தீவைத்து போராளிகள் தற்கொலை செய்து கொண்டனர் என்று குறிப் பிடப்பட்டுள்ளது. (உ)

## புனரமைப்பு

(துனுக்காய்)

கடந்தகால வன்செயல்களினால் சேதமடைந்து பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதிமூலம் புனரமைக்கப்பட்ட கோகிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலய கட்டடங்களை, யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்ரவிராஜ் அண்மையில் திறந்து வைத்தார். (உ)

# கொலம்பிய விடுதியில் பாரிய குண்டுவெடிப்பு

## 20 பேர் உயிரிழப்பு

(போகோடா)

கொலம்பிய விடுதி ஒன்றில் நேற்று இடம்பெற்ற பாரிய குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 20 பேர் உயிரிழந்துள்ளதுடன், 100இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

கொலம்பியத் தலைநகர் போகொடாவில் இடம்பெற்ற இச்சம்பவத்தினால் விடுதி முற்றாகச் சேதமடைந்துள்ளது.

கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியிருக்கும் சடலங்களையும் காயமடைந்தவர்களையும் மீட்கும் பணியில் மீட்புப் பணியாளர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளதுடன், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாமென அச்சம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை,குண்டு வெடிப்பு இடம்பெற்ற இடத்திற்கு மிக அண்மையில் கொலம்பியாவுக்கான அமெரிக்கத் தூதுவரின் இல்லம் அமைந்துள்ளதாகவும், குண்டுதாரியின் இலக்கு அதுவாக இருக்கலாமெனவும் சந்தேகம் வெளி யிடப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தையடுத்து அமெரிக்கத் தூதுவரின் இல்லத்துக்குப்பலத்த பொலிஸ்பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இக்குண்டுத் தாக்குதலுக்கு எந்தவொரு அமைப்பும் இதுவரை உரிமை கோரவில்லை. (உ-2)



புதுடில்லியில் புனித துறவிதுர்க்கா ராம் நினைவாக நடந்த நிகழ்ச்சியில் 100 ரூபாய் நாணயத்தை பிரதமர் வாஜ்பாஜ் வெளியிட்டார். நிகழ்ச்சியில் மஹாராஷ்டிர பாரம்பரிய தலைப்பாகை வாஜ்பாய்க்கு அணிவிக்கப்பட்டது. தனது தலைப்பாகையை சரி செய்து கொள்கிறார் வாஜ்பாய்.

## பாக்.துணைத் தூதுவரை வெளியேறுமாறு உத்தரவு

(புதுடில்லி)

இந்தியாவின் தலைநகர் புதுடில்லியில் அமைந்துள்ள பாகிஸ்தானிய தூதரகத்தில் கடமையாற்றிய துணைத்தூதுவரையும் மற்றும் நான்கு தூதரக உத்தியோகத்தரையும் 48 மணித்தியாலததினுள் வெளியேற வேண்டுமென இந்திய அரசு நேற்று அறிவித்துள்ளது.

இதனையடுத்து இஸ்லாமாபாத்தில் உள்ள இந்திய தூதரகத்தின் துணைத்தூதுவரையும் மற்றும் தூதரக உத்தியேகத்தாகள் நால்வரையும் 48 மணிநேரததிற்குள் நாட்டைவிட்டு வெளியேறுமாறு பாகிஸ்தான் கூறியுள்ளது.

காஷ்மீரில் தீவிரவாதிகளுக்கு நிதியுதவி வழங்கியதாக பாகிஸ்தான் துணைத்தூதுவர் மீது பொலிஸார் குற்றம் சுமத்தியதையடுததே பாகிஸ்தானிய துணைத தூதுவரையும் எனைய நால்வரையும் வெளியேற்றவுள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. (இ)



ஈராக் பேரழிவு தரும் அணு ஆயுதங்களை மறைத்துவைத்துள்ளதாக குற்றஞ்சாட்டிய அமெரிக்க ராஜாங்க அமைச்சர் கொலின் பவல் அதனை நிரூபப்பதற்கான ஒளி, ஒலி நாடாக்களையும் ஐ.நா.வில் சமர்ப்பத்துள்ளார்.

## அமெரிக்கா மீதான தாக்குதல் கடுமையானதாக இருக்கும்

### எச்சரிக்கை விடுத்தது வடகொரியா

(பியோங்யாங்)

தனது அணுநிலைகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் அமெரிக்கா மீது கடுமையான எதிர்த்தாக்குதல் நடத்தப்படுமென வடகொரியா எச்சரித்துள்ளது.

அத்துடன், அமெரிக்கா வடகொரியாவைத் தாக்க எண்ணினால் முதலில் வடகொரியாவே அமெரிக்கா மீது தாக்குதல் நடத்தும் என்று வடகொரியா தெரிவித்துள்ளது.

தன்னுடன் போர் தொடுத்தால் தோல்வியை சந்திக்கப் போவது வடகொரியா தான் என்று அமெரிக்கா கருதுவது வெறும் கற்பனையே என்று வடகொரியா மேலும் கூறியுள்ளது. (உ-2)

## கணனி யுத்தத்திற்கு தயாராகிறது அமெரிக்கா

(வாஷிங்டன்)

எதிரிநாடுகளின் கணனி வலையமைப்புகளை அழிக்கும் வகையிலான கணனி யுத்தத்திற்குத் தயாராகுமாறு அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ் உத்தரவிட்டுள்ளார்.

வெளிநாட்டுக் கணனி வலைப் பின்னல்களை ஊடுருவி அவற்றை குழப்பும்நடவடிக்கைகளை அமெரிக்கா முதல் முதலாக ஆரம்பிக்கவுள்ளது.

இவ்வாறான நடவடிக்கை தொடர்பான விதிமுறைகள் மற்றும் எப்போது எவ்வாறு நடவடிக்கைகளை எடுப்பது என்பதைத் தீர்மானிப்பதற்கான பணிப்புரையில் கடந்த ஆண்டு ஜூலை மாதம் புஷ் கைச்சாத்திட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இரகசியமாக வைக்கப்பட்டிருந்த அந்த தேசியப்பாதுகாப்புப் பணிப்புரை தற்போது பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது.

கணனி யுத்தத்திற்கான விதிமுறைகள் வகுக்கப்பட்டு வரும் நிலையில் ஈராக்குடன் யுத்தம் ஏற்பட்டால் ஈராக்கிய கணனி வலை அமைப்புக்கள் மீது இவ்வாறான கணனி யுத்தம் மேற்கொள்வது பற்றிப் பென்ரகன் ஆலோசித்து வருவதாகவும் தெரிவிகக்கப்படுகிறது. (உ-2)

## உலக நீதிமன்ற உத்தரவின் பேரில்

# மெக்ஸிக்கோ நாட்டவர்களுக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனை ரத்து

(ஹேக்)


அமெரிக்காவில் மரணதண்டனையை எதிர்நோக்கியுள்ள மெக்ஸிகோ பிரஜைகளின் தண்டனையை நிறுத்துமாறு உலக நீதிமன்றம் அமெரிக்காவிற்கு உத்தரவிட்டுள்ளது.

50இற்கும் மேற்பட்ட தனது பிரஜைகள் அமெரிக்காவில் மரணதண்டனையை எதிர்நோக்கியுள்ளனர் என்று சர்வதேச நீதிமன்றத்திற்குத் தெரிவித்திருந்தது.

அமெரிக்காவில் கைது செய்யப்படும் பிற நாட்டவர்கள் தூதரகங்களின் உதவியைப் பெற்றுக் கொள்ளும் உரிமை வழங்கப்படுவது வழமையாயினும், இந்த உரிமையை அமெரிக்க அரசு மெக்ஸிகோ கைதிகளுக்கு வழங்கவில்லை.

இதனால், மரணதண்டனை விதிக்கப்பட்ட மெக்ஸிக்கோவைச் சேர்ந்த 50இற்கும் மேற்பட்ட கைதிகளுக்கு விதித்த மரண தண்டனையை மீளவிசாரிக்க வேண்டும் எனக்கோரி மெக்ஸிகோ அரசு சர்வதேச நீதிமன்றில் வழக் குத் தாக்கல் செய்திருந்தது.

இந்த வழக்கை ஆராய்ந்த சர்வதேச நீதிமன்றம், உடனடியாக மெக்ஸிகோ கைதிகளுக்கு வழங்கப்பட்ட மரணதண்டனையை நிறுத்துமாறு அமெரிக்காவுக்கு உத்தரவிட்டுள்ளது. (உ-2)



எட்டாவது உலகக் கோப்பை கிரிக்கெட் திருவிழா தென்னாபிரிக்காவின் கேப்டவுன் நகரில் கோலாகலமாக தொடங்கியுள்ளது. கொல்கத்தாவில் கல்விக்குரிய கடவுளான சரஸ்வதி தேவியின் சிலையை உலகக் கோப்பை வடிவிலான கூடாரத்தில் அமைத்துள்ளனர் அப்பகுதி மக்கள்.

# பாதுகாப்பு நிதி ஒதுக்கீட்டை

# ஆசிய நாடுகள் அதிகரித்துள்ளன

(வாஷிங்டன்)

ஆசிய நாடுகள் தமது பாதுகாப்புக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரித்திருப்பதாக அமெரிக்க இராஜாங்க அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

1990ஆம் ஆண்டுக்குப் பின்னர் பாதுகாப்புக்கான நிதி ஒதுக்கீடு வளரும நாடுகளில் 18 சதவீதமாக அதிகரித்துள்ளது.

பனிப்போருக்குப் பின்னர் பாதுகாப்புக்கென செலவீனம், ஐரோப்பிய நாடுகளில் குறைந்துள்ளது. அதே நேரம், சீனா,இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் பாதுகாப்புக்கென செலவீனம் மிகவும் அதிகரித்துள்ளது.

இதேவேளை, சவூதிஅரேபியா, துருக்கி, ஜப்பான் ஆகிய நாடுகள் ஆயுதங்கள் இறக்குமதி செய்வதில் முன்னணி வகிக்கின்றன.

இந்த நாடுகளுக்கு ஆயுதங்களை வழங்குவதில் அமெரிக்கா தொடர்ந்தும் முன்னிலை வகித்து வருகின்றது என்று அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-2)

## பரீட்சையைக் குழப்பிய நச்சுவாயு

(லிஸ்பன்)

பரீட்சையைத் தடுத்து நிறுத்துவதற்காக போர்த்துக்கல் பாடசாலை மாணவன் ஒருவன் நச்சுவாயுவை வகுப்பறைக்குள் செலுத்தியுள்ளான்.

இதனால் வகுப்பிலிருந்த ஆசிரியரும், 6 மாணவர்களும் சுவாசக் கோளாறுக்குட்பட்டுள்ளதோடு பரீட்சையும் ரத்து செய்யப்பட்டுள்ளது. இவ்வாறானதோர் சம்பவம் போர்த்துக்கல் பாடசாலையில் இடம் பெற்றது இதுவே முதல் தடவையாகும்.(பி-2)

## புதிய வால் நட்சத்திரம் மாலையில் தெரியும்

(மும்பை)

மும்பை புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட 'நீட்' வால் நட்சத்திரத்தை அடுத்த சில வாரங்களில் வெறும் கண்ணால் காண முடியும்.

மும்பையில் உள்ள நேரு கோளரங்க அதிகாரிகள் இதைத் தெரிவித்தனர். மேற்கு வானத்தில் மாலை நேரங்களில் சூரியப் பாதையில் நட்சத்திரக் கூட்டங்களுக்கு இடையே இதைக் காணலாம். சூரியன் மறையும் போது இது பளிச்சென தெரியும்.

அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையம்தான் இந்த புதிய வால் நட்சத்திரத்தைக் கண்டு பிடித்தது தற்போது இதை பைனாகுலர் மூலமாகப் பார்க்கலாம்அடுத்த சில நேரங்களில் வெற்று கண்ணால் உற்று நோக்கினால் இந்த வால் நட்சத்திரம் தெரியும். (உ)

குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி
வடுப்பரியும்
நாணுடையான் கட்டேதெளிவு
— குறள் —

# வலம்புரி

## உயிர்துறந்து காப்பாற்றினர்

நெடுந்தீவுக் கடற்பரப்பில் விடுதலைப்புலிகளின் படகை, கடற்படையினர் சுற்றி வளைத்ததன விளைவாக. விடுதலைப் புலிப்போராளிகள் மூவா, தம்மைத்தாமே அழித்துக் கொண்ட சம்பவம் தமிழ் மக்களிடம் பெரும் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது. சமாதானச் சூழ்நிலை இருக்கும்போது கடற்படையினர் புலிகளின் படகை வழிமறித்து சுற்றிவளைத்தமையானது சமாதான முயற்சியை குழப்பும் நடவடிக்கை எனக்கருத இடமுண்டு.

விடுதலைப்புலிகள் படகுகளில் ஆயுதங்கள் கொண்டு செல்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு கடற்படையின் வழமையான உச்சரிப்பு. இதனை அடிபபடையாகக் கொண்டு சமாதானமுயறசிக்கு துணையாக இருப்பவாகள் எழுந்தமானமாக முடிவுகளை எடுத்து விடக்கூடாது.

இத்தகையதொரு முடிவு எடுக்கப்படுமாயின் அதன் விளைவு பாரதூரமானதாகவேயிருக்கும் சமாதான முயற்சிகள் நடந்து கொண்டிருக்கும் போது விடுதலைப் போராளிகளின் படகு கடற்படையினரால் சுற்றி வளைககப்பட்ட சம்பவமானது சமாதான முயற்சியில் கடற்படைக்கு எந்தவித அக்கறையுமில்லையென்பதையே தெளிவுபடுத்துகிறது.

ஏதோ விடுதலைப் புலிகளிடம் ஆயுதம் இல்லாதது போலவும், இப்போது தான் அவர்கள் ஆயுதத்தை சேகரிப்பது போலவும கடற்படை ஓர் மாயையைக் காட்ட முற்படுகின்றது.

ஆனையிறவு முகாம் தகர்ப்பு, கட்டுநாயக்கா விமானததளதாக்குதல் என எத்தனையோ தாக்குதலகளை நடத்தியவர்கள் புலிகள. எனவே அவர்களிடம் கனரக ஆயுதங்கள் உண்டு என்பது உலகறிந்த உண்மை. அத்தகைய ஆயுதஙகள இருந்ததன் காரணமாகவே இலங்கை அரசு விடுதலைப்புலிகளுடன் சமாதானப்பேச்சை நடாத்த முன வந்தது. இந்நிலையில் புலிகளின் படகில் ஆயுதம் இருந்தது. அதனால் படகைச் சுற்றிவளைததோம் என கடற்படை கூறுவது விசித்திரமானது. ஏனெனில் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முன்னர் கடற்பகுதியினூடாகவே புலிகள் தமக்குத் தேவையான ஆயுதங்களை பரிமாறிக கொண்டனர். அப்போதெல்லாம் புலிகளின் படகு என்றவுடன் கடற்படையினர் தமது படகுகளின் வேகத்தை அதிகரித்துக்கொண்டு புலிகளின் கணகளில் படாமல் தப்பி ஓடிய சம்பவங்கள் நிறையவேயுண்டு.

இந்நிலைகளை மறந்து இப்போது யுத்த நிறுத்தம் கடைப்பிடிக்கப்படும் போது புலிகளின் படகை கடற்படையினா சுற்றி வ்ளைப்பது எவ்வகையிலும் நியாயமாகாது. கடற்படையினரால் சுற்றி வளைக்கப்பட்ட படகில் இருந்த புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மதித்ததன் காரணமாகவே அவர்கள் கடற்படைமீது தாக்குதல் நடத்தவில்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும். தம்மைததாமே அழித்துக் கொண்ட மூன்று புலிப்போராளிகளும் தம் உயிரைத்துறந்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தை காப்பாற்றியுள்ளனர் என்பது மறுக்க முடியாத உண்மை.

# நற்செய்திகளை நாம் உணவாகக் கொண்டு வளமான உளவளர்ச்சியை உருவாக்குவோம்



இவ்வுலகிலே பிறந்த ஒவ்வொருவரும் வாழப்பிறந்தவர்கள். வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையினிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. கருவிலே உருவாகி முதிர்வயதில் மடியும் வரை இவ்வளர்ச்சிப் படியினை அவதானிக்கலாம். மனிதனது உடலும் உள்ளமும் வளர்ச்சியடையும் போதுதான் அவன் முழு மனிதனாகின்றான். உடல் வளர்ச்சியடைந்து உளவளர்ச்சி இல்லையென்றால் முரண்பட்ட பிறழ்வுகள் ஏற்படக் காரணமாக அமைந்துவிடுகிறது. கிறிஸ்தவன் நற்செய்தி வார்த்தைகளை ஆன்ம வளர்ச்சியடையும் உணவாக உட்கொள்ளா விட்டால் அதனால் அவனுக்குப் பயனில்லை. புனித பவுல் ''நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்குக் கேடு!'' என்று நற்செய்தியின் மகத்துவத்தைப்பற்றிக் கூறுகின்றார்.

*மீட்பே இறைவன் திருவுளம*

எந்த மனிதனும் அழிந்து விடாமல் மீட்பைக் கண்டடைய வேண்டும் என்பதே இறைவனின் திருவுளமாகும். நாமாகவே தேடிக்கொண்டதே அழிவின் பாதை. மனிதன் மமதை கொள்கின்ற போது அழிவின் ஏணியிலே ஏறுகின்றான். ஏறிய வேகத்திலேயே இறங்கும் பொழுது பாதாளப் படுகுழியிலே வீழ்ந்து விடுகின்றான். மற்றவர்களை ஒரு பொருட்டாகக் கருதாதவன் ஞான வார்த்தைகளுக்குச் செவி சாய்க்க மாட்டான். பணம் என்ற மெத்தையிலே உறங்குபவன் வறுமையுற்றவரைத் திரும்பிப் பார்க்க மாட்டான். ஞானிகள் தங்கள் சொற்களால் தங்களை அன்புக்குரியோர் ஆக்கிக கொள்கின்றார்கள். மூடரின் இச்சகம் வீணாகின்றது என்று ஞானமுள்ளவர்களின் செயலைச் சீராக் ஆகமம் கூறுகின்றது.

## பரமபிதா காட்டிய பாதை

*நற்செய்திப் பணி*

இயேசு சென்ற இடங்களில் எல்லாம் நற்செய்தியைப் போதித்து நோய், பிணியுற்றவர்களைக் குணமாக்கி எங்கும் நன்மையே செய்துகொண்டு சென்றார். தம்மிடம் வந்தவர்களை அவர் வெறுக்கவில்லை. இவ்வாறு ஒரு நாள் சீமோன் வீட்டுக்கு வந்தபோது அவருடைய பிணியுற்றிருந்த மாமியாரைக் குணமாக்கினார். நற்செய்திப் பணி என்பது நற்செயல் புரிவதே. நற்செயல் நற்செய்தியாகி நானிலம் எங்கும் பரவுகிறது. செயலிலே காண்பிக்கப்படாத விசுவாசம் செத்தது என்று புனித யாக்கோபு கூறுகின்றார். இன்று போதனைகள் மிஞ்சியுள்ளதால் உண்மையான விடுதலையைக் கண்டுகொள்ள முடியாமல் போகிறது. பெயர், புகழ், பட்டம், பதவி, குலங்கோத்திரம் ஏழைகளை இனங்காண விடாமல் தடுக்கின்றது. பணியை அதிகாரப் பதவியாக்கி நியாயப்படுத்தி ஏழைகள் குரலைப் புறந்தள்ளி இறை அரசுக்காகப் பாடுபடுகிறார்கள்.

*பாவமில்லாதவன் தண்டிக்கலாம்*

வேசித்தனத்தில் ஈடுபட்ட பெண்ணை மூப்பர்களும் பெரியவர்கள் என்று எண்ணப்பட்ட தலைவர்களும் இயேசுவிடம் இழுத்து வந்து தகுந்த தீர்ப்பு வழங்குமாறு கூறினார்கள். இயேசுவோ ''உங்களில் பாவம் இல்லாதவன் முதற் கல்லை அவள் மீது வீசட்டும்'' என்றார். ஒருவர் பின் ஒருவராக எல்லோரும் கற்களைப் போட்டுவிட்டு அவ்விடம் விட்டு நகர்ந்துவிட்டார்கள். தன்னை நீதிமான் என்று கூறுபவர்கள் செயலிலே புனிதம் உள்ளவர்களாக ஆகவேண்டும். நாம் யாருக்கும் தீர்ப்புக் கூற முடியாது. ஏனென்றால் நாம் எல்லோரும் பாவிகள். நாள் தோறும் புனித வாழ்வை வாழ்ந்து வழிநடப்பதன் மூலமே அதை பெறமுடியும். நாம் செய்யும் ஒரு அநீதியான செயல் எம்முடைய புண்ணியங்களையெல்லாம் இல்லாமலே அழித்துவிடும். புண்ணியம் எங்கோ இருந்து வருவதல்ல. சகோதர மனிதனுக்கு இரங்குவதிலே தான் புண்ணியம் தங்கியுள்ளது.

பெறுதற்கரிய பேறாக நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவால் மீட்கப்பட்டோம் என்பதை ஒவ்வொரு கிறிஸ்தவனும் உணர்ந்து தம் சொல்லாலும் செயலாலும் பகைமையில இருந்து விடுவித்து கிறிஸ்துவின் ஒளியின் அருகே மற்றவர்களையும் கூட்டிச் சேர்ப்பவர்களாக உண்மையிலும், நீதியிலும், அன்பு வாழ்வாலும் முன்மாதிரிகையாக வாழ முற்பட வேண்டும். கிறிஸ்து விட்டுச் சென்ற அன்புப் பணியை அவர் வழி நின்று பின்தொடர முன்வரவேண்டும்.

**அமல நிறோசன்**

# சிறைக் கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தம் இலங்கை-ஐக்கிய இராட்சியம் கைச்சாத்து

(கொழும்பு)

இலங்கை அரசும் ஐக்கிய இராட்சியமும் சிறைக் கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

அண்மையில் ஐக்கிய இராட்சியத்தின் பொதுநலவாய நாடுகளின லண்டன் அலுவலகத்தில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவும், ஐக்கிய இராட்சியத்தின் வெளிவிவகார அமைச்சர் மைக் ஓ ப்ரியானும் மேற்படி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இதனால் இலங்கையுடன் சிறைக் கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தம் செய்துள்ள முதலாவது நாடு என்ற பெருமையை ஐக்கிய இராட்சியம் பெற்றுள்ளது.

இவ் ஒப்பந்தத்தின் மூலம் இரு நாடுகளிலும் சிறைக் கைதிகளாக இருப்பவர்கள் தமது சிறைவாசத்தின் மிகுதி நாட்களில் தத்தமது சொந்த நாட்டில் சேவை செய்வதற்கு வழி செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஐக்கிய இராட்சியத்தின் வெளிவிவகார அமைச்சர் மைக ஓ ப்ரியான் கருத்து வெளியிடுகையில்,

இவ் ஒப்பந்தத்தினால் இரு நாடுகளிற்கும் இடையிலான இராஜ தந்திர தொடர்புகள் மேலும் அதிகரிக்கும்.

அத்துடன், இது போன்ற ஒப்பந்தங்களினை எகிப்து, தாய்லாந்து, பிறேசில், கொங்கொங், மொறாக்கோ, வெனிசுவெலா, கியூபா, தபானா ஆகிய நாடுகளிலும் செய்துள்ளோம் என்று தெரிவித்துள்ளார். (உ-10)

# இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகள் கடற்படைப் பயிற்சி

## இலங்கையும் இணைகின்றது

(கொழும்பு)

இந்து சமுத்திரப் பிராந்தியத்திலுள்ள நாடுகள் கூட்டாக அந்தமான் தீவு கடற்புகுதியில் நடத்தவிருக்கும் கடற்படைப் பயிற்சியில் இலங்கைக் கடற்படையும் பங்கு பற்றவிருக்கின்றது.

'மிலான் 2003' என்னும் இப்பயிற்சியை இந்தியா நடத்துகின்றது.

இல்ங்கைக் கடற்படையின் சயுரா மற்றும் சுரணிமாலா ஆகிய கடற்படைக் கப்பல்கள் இந்த ஐந்து நாள் பயிற்சியில் பங்குபற்றவுள்ளன.

இக்கப்பல்கள் நேற்று இலங்கையிலிருந்து புறப்பட்டுள்ளன.

இதன் நோக்கம் கடற்படை நடவடிக்கைகளை நவீன தொழில் நுட்பங்கள், உபாயங்களினடிப்படையில் நிறைவேற்றுவதில் பயிற்சி பெறுவதாகும் என்று கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (உ)

# விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யா/ஆனைப்பந்தி மெ.மி வித்தியாலய இல்லவிளையாட்டு விழா எதிர்வரும் 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 1.45 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் எஸ். சோமேஸ்வரபிள்ளையின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், சிறப்பு விருந்தினர்களாக யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி - க.சுப்பிரமணியம் மற்றும் நல்லூர் உப பிரதேச செயலர் சி.இரவீந்திர சர்மா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-10)

# யாழ். வணிகர் கழக புதிய நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வணிகர் கழக நிர்வாகசபைத் தெரிவு அண்மையில் கழக அலுவலகத்தில் தலைவர் இ.ஜெய சேகரன் தலைமையில் நடை பெற்றது.

இதில் தலைவராக இ.ஜெயசேகரன், உபதலைவராக த.சற்குணராசா, செயலாளராக இ.ஜனக்குமார், உப செயலாளராக ச. சிவகுமரன், பொருளாளராக கு.கங்கைவேணியன் ஆகியோரும்,

நிர்வாக உறுப்பினர்களாக கா.நித்தியானநதன், க.வி.குலரத்தினம், ப.சிவபாஸ்கரன், வை.நமசிவாயம், இ. சிவலிங்கம், க.நந்தகுமார், இ.ஜெயராசா, தி.இராசேந்திரன், அ.ஸ்ரீபாஸ்கரன், க.மகாலிங்கம், க.கனகசபாபதி, கு.தர்மராசா, எஸ்.சந்திரபோஸ், சி.ஜெயகாந்தன் ஆகியோரும் தெரிவு செய்யபபட்டனர். (உ)

# மன்னாரில் சிறைச்சாலை அமைக்க நடவழிக்கை

(மன்னார்)

மன்னாரில் சிறைச்சாலை ஒன்று புதிதாக அமைக்கப்படவுள்ளது.

இச்சிறைச்சாலையை அமைப்பதற்கான பூர்வாங்க வேலைகளை மேற்கொள்ளவென சிறைச்சாலைத் திணைக்கள ஆணையாளர் அண்மையில் மன்னார் மாவட்டத்துக்கு விஜயம் செய்திருந்தார்.

மன்னார் மாவட்டத்தில் குற்றவியல் சம்பந்தமாக கைது செய்யப்படுவோர் தற்சமயம் மாவட்ட நீதிமன்றத்திலேயே தடுத்து வைக்கப்பட்டு, அனுராதபுரம் சிறைச்சாலைக்கு அனுப்பப்படுகின்றனர். (உ-8)

**தினசரி தியானம்**
**படித்தல்**

நீ ஒரு புத்தகத்தைப் படிக்கும் போது அதை ஏகாக்கிர சித்தத்துடன் படிக்க வேண்டும். அவசர அவசரமாகப் பக்ககங்களைப் புரட்டிக்கொண்டு போவதில் பிரயோஜனம் இல்லை. கீதையில் ஒரு பக்கம் படி. அதை மூடி வை. பின் படித்ததை்தைப் பற்றிச் சிந்தனை செய். மஹா பாரதம், உபநிஷதங்கள், பாகவதம் இவற்றினின்றும் கீதா வாக்கியங்களை ஒத்த வாக்கியங்களை கண்டுபிடி. அவற்றுடன் ஒப்பிட்டுப் பார்.

சுவாமி சிவானந்தர்

# சிறுவர்களைப் படைக்குச் சேர்ப்பது பற்றி விசாரணை

## யுனிசெவ் நடத்தும்

(கொழும்பு)

பதினெட்டு வயதுக்குட்பட்ட சிறுவர்களை போராட்டத்தில் சேர்த்துக் கொள்வது தொடர்பாக யுனிசெவ் நிறுவனம் விசாரணைகளை நடத்தவுள்ளது.

நேற்று முன்தினம் ஜேர்மன் தலைநகர் பேர்ளினில் இவ்விடயம் குறித்து ஆராயப்பட்ட போது அரசாங்க மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் இதற்கான [illegible]

கடந்த மாத இறுதியில் யுனிசெவ் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஹரோல் பெலாமி தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் அரச தரப்புப் பிரதிநிதிகளைச் சந்தித்து சிறுவர்களைப் போரில் ஈடுபடுத்துவது தொடர்பாக பேச்சுவார்த்தைகளை நடத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## சமஷ்டி பற்றி ஆராய்வதற்கு பாராளுமன்றக் குழு ஜேர்மன் சென்றது

(கொழும்பு)

சமஷ்டி ஆட்சிமுறை குறித்து ஆராய ஐவர் அடங்கிய மற்றுமொரு பாராளுமன்றக் குழு நேற்று முன்தினம் ஜேர்மன் சென்றுள்ளது.


இக்குழுவில் பொது ஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த நிலந்த பண்டாரா தென்னக்கோன், தமிழ்க் கூட்டமைப்பு பாராளு மன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் ஆகியோரும் அடங்குகின்றனர்.

ஜேர்மன் அரசசார்பற்ற நிறுவனமொன்றின் அனுசரணையுடன் தொழில் அமைச்சு இக்குழுவின் விஜயத்திற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளது.

இக்குழுவினர் பெல்ஜியம், சுவிஸ்,கனடா போன்ற நாடுகளுக்குச் செல்ல ஏற்பாடாகியுள்ளது.

இதேவேளை, ஏற்கனவே 15 எம்.பிக்கள் சமஷ்டி பற்றி ஆராய மேற்படி நாடுகளுக்குச் சென்றமை இங்கு குறிப்பிடத்தக்கது (உ-3)





மட்டு-அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த மாவீரர்களினதும் விடுதலைப்புலிப்போராளிகளினதும் பெற்றோர்களை சந்தித்து உரையாடுவதையும், கலந்து கொண்ட பெற்றோரின் ஒரு பகுதியினர்ரையும் படத்தில் காணலாம்.

### வட - கிழக்கு...

படையில் சேர்க்கிறார்கள் என்பது தொடர்பான விவகாரமும் முக்கியமாகப் பேசப்பட்டது.

இவ் விடயம் குறித்து அரசதரப்புப் பிரதிநிதிகள் புலிகளிடம் விளக்கம் கோரினர். அது குறித்து விடுதலைப் புலிகள் தெளிவாக விளக்கமளித்ததாக எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

உயர் பாதுகாப்பு வலயம் குறித்து நேற்றைய பேச்சுக்களின் போது ஆராயப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை 6ம் கட்டப் பேச்சுவார்த்தைக்கு முன்னர் இணக்கம் காணப்பட்ட விடயங்களை நிறைவேற்றுவதில் இரு தரப்பும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதென்றும இருதரப்பினரும்முடிவு செய்துள்ளனர். (இ)


## நாளை சங்குநாதம்

விசேட அரசியல் கட்டுரைகள மற்றும் உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டி, கவிதைக் கலசம், மற்றும் பல அம்சங்களுடன் வெளிவருகிறது. உடன் தவறாது கேட்டு வாங்குங்கள்.


### யாழ்.குடா...

ஒலிபெருக்கிகளில் காலை முதல் மாலைவரை சோககீதம் இசைக்க விடப்பட்டிருந்தது.

போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டிருந்த தனியார் சிற்றூர்திகள் மற்றும் முச்சக்கர வண்டிகளில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் அரைக்கம்பத்தில் புலிக்கொடி பறக்கவிடப்பட்டிருந்தது.

குடாநாட்டில் மக்களின் நடமாட்டமும் வழமையைவிடக் குறைவாகவே காணப்பட்டது. (இ-4,7,11)

## நிர்வாகசபை தெரிவானது

(யாழ்ப்பாணம் )

இருபாலை கிழக்கு ஸ்ரீ முருகன் சன சமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த மாதம் 30ம் திகதி நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நடப்பு வருடத்துக்கான புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது.

தலைவர் கி.தங்கவடிவேல், செயலாளர் இ. ராஜ்குமார், பொருளாளா க.சுவேந்திரகுமார் உட்பட நிர்வாகசபை உறுப்பினர்கள் 12 பே தெரிவு செய்யப் படடுள்ளனர். (இ)


சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட

V.S.P ஸஞ் ஒயில்

தயாரிப்பாளர்

26A, மானிப்பாய் வீதி, [C/4839] யாழ்ப்பாணம்.


## இறுதிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் வளர்மதி விளையாட்டுக்கழகமும் சனசமூக நிலையமும் இணைந்து நடாத்தும் விக்ரம்,ராஜன்,கங்கு ஞாபகார்த்த கிண்ணத்திற்கான கிரிக்கெற் போட்டியின் இறுதிப்போட்டி இன்று 8.30 மணிக்கு கொக்குவில இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் கொக்குவில கே.சி.சி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஜொலிஸரார் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ் பல்கலைக கழகப் புவியியல் துறைப் பேராசிரியர் கே.குகபாலன் பிரதம விருந்தினராகவும் ,கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் பி.கமலநாதன் சிறப்பு விருந்தினராகவும்கலந்து கொள்ளவுள்ளனர். (உ-5)

## சீருடை முத்திரைகள் வழங்கப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

வலி கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர்பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களின் சீருடைக்கான முத்திரைகள் அம்மாணவர்கள் வசிக்கும் கிராம அலுவலர்களிற்கு வழங்கப்பட்டன.

மாணவர்களின் பெற்றோர்கள் அடையாளத்தை உறுதிப்படுத்தி சீருடைக்கான முத்திரையைப் பெற்றுக் கொள்ளலாம் என்று கோப்பாய் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார் (இ-5)

### இலங்கையில் சர்வ....

முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் நானுமே இந்த ஆதரவை நாம் சர்வதேச சமூகத்திடம் பெற்ற போது அந்த சர்வதேச சமூகம் இலங்கைக்கு வழங்கி வந்த ஆதரவு மிகக்குறைவானதாகும். ஒரு கட்டத்தில் உதவிகள் வழங்க சர்வதேச சமூகம் மறுத்திருந்தது. இருப்பினும் அவர்களின் அதரவினைப் பெறுவதில் வெற்றி கண்டோம்.

எங்களால் முன்னெடுக்கப்பட்ட சர்வதேச சமூகத்தின் உதவிகளை தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்துச்செல்வது மகிழ்ச்சிக்குரியதாகும். நோர்வேயை சமாதானப்பேச்சின் அனுசரணையாளராகக் கொண்டு வந்தது எனது அரசாங்கமே.

இதனைப்பிரதமர் விக்கிரம சிங்கா தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றாலும் அதில் சில குறைபாடுகள் உண்டு. எனினும் அவர் சர்வதேச சமூகத்தின் உறவை நன்றாகப்பேணி சமதாதானத்தை முன்னெடுக கின்றார்

சர்வதேச சமூகம் எமக்கு உதவுகிறது என்றால் அதற்குச் சில கட்டுப்பாடுகளும் உண்டு உலகம் சுயநலம் கொண்டது. எதாவது நன்மை இருந்தால் அன்றி எந்த நாடும் இலங்கையில அக்கறை கொள்ளப்போவது இல்லை.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஒஸ்லே மாநாட்டில் விடுதலைப்புலிகள் வன்முறைகளைக் கைவிடவேண்டுமென பகிரங்கமாக கோரிக்கை விடுத்த போதும் இதற்கு விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து ஆக்கபூர்வமான பதில் எதுவும் கிடைக்க வில்லை யென்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்திருந்தார்.

இதே கேள்விக்கு பதிலளித்த பிரதமர்ரணில் விக்கிரமசிங்கா சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பின்றி தனித்து நின்று இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பது கடினம். சர்வதேசத்தின ஒத்துழைப்புடன் சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்வது எமக்கு சுலபமாக வுள்ளது.இந்நிலையில் நோர்வே அரசு தனது பணியை செவ்வனே ஆற்றி வருகிறது என்று தெரிவித்தார்.

மீள் குடியேற்றம் தொடர்பான கேள்விக்கு பதிலளித்த ஜனாதிபதி சந்திரிகா குமார்துங்கா,விடுதலைப் புலிகள் மீள்குடி யேற்றம் பற்றிக் கூறினாலும், அவர்கள் சர்வதிகாரப்போக் கினால் மீள் குடியேற்றத்தில் மக்கள் அச்சம் தெரிவிக்கிறார்கள. இதனால் மீள் குடியேற்றம் தொடர்பான நம்பிக்கை மக்களுக்கு ஏற்படவில்லை . இந்த மீள்குடியேற்றங்கள் எனது ஆட்சிக் காலத்திலும் இடம் பெற்றது. மீள் குடியேற்றம் சீராக இடம்பெற வேண்டுமானால் விடுதலைப புலிகள் தமது பாசிசத்தை நிறுத்தவேண்டும் பல கட்சி ஜனநாயகம் ஏற்பட்டால் தான் மீள் குடியேற்றத்தை ஆரம்பிக்க முடியுமெனத் தெரிவித்தார்.

இக் கேள்விக்கு பிரதமர் ரணில் விக்கிரம சிங்க பதிலளிக்கையில் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் இணங்கியதன் பிரகாரம் மீள்குடியேற்றத்திற்கு முன்உரிமை அளிக்கப்பட்டுள்ளது. சகல இன மக்களும் மீளக் குடியமர்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது இருப்பினும் இதில் பல நடைமுறைப்பிரச்சினைகள் உள்ளன என்று தெரிவித்தார்.

சமஷ்டி அமைப்பு முறைபற்றி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடம் கேட்ட போது சமஷ்டி அமைப்பு முறை தொடர்பாக பண்டா - செல்வா ஒப்பந்தம் ஏற்பட்ட போது அதனை எதிர்த்து ஐக்கிய தேசியக் கட்சியினர் பாதயாத்திரை செயதமையால் அவ்வொப்பந்தம் கிழித்தெறியப்பட்டது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சமஷ்டி அமைப்பு முறையிலான அரசியல் அமைப்புத்தான் சிறந்தது என்பதில் தன்னம்பிக்கையுடன் செயல்பட்டேன். அந்த சமஷ்டி அரசியல் அமைப்பு முறைபற்றித் தான் இப்போது அரசு தீவிரமாக ஆராய்ந்து வருகிறது. அன்று அவர்கள் எதிர்ப்புத் தெரிவிக்காமல் இருந்திருந்தால் பிரச்சினைக்கு அப்போதே தீர்வு கண்டிருக்கமுடியும் என்று குறிப்பிட்டார். இந்த கேள்விக்கு பதிலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தற்போதைய சமாதானப் பேச்சுவார்த்தைகளின் மூலம் சமஷ்டி அரசியல் தீர்வுக்கு புலிகள் இணங்கியுள்ளனர் என்று தெரிவித்தார். (ம)

### புலிகளின்...

விடுதலைப்புலிகள் பிரயாணம் செய்யும் படகுகளைச் சோதனையிடும் சந்தர்ப்பம் ஏற்பட்டால்அதனை இனிமேல் கடற்படையினரே. செய்வர். கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள கடற்படையினருக்குரிய படகுகளில் இருந்து மேற்பார்வை செய்வார்கள். நெடுந்தீவு கடற் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவம் போர் நிறுத்த உடன் படிக்கையை மீறும் சம்பவமாகும். யுத்த நிறுத்த உடன்படிக்கையின் படி ஒரு தரப்பினர் மற்றைய தரப்பினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு ஆயுதங்களுடன் செல்ல முடியாது.

யுத்தநிறுத்த உடன்படிக்கையின் படி இலங்கைக்குரிய கடற்பிரதேசத்தினைப் பாதுகாத்து உறுதிப்படுத்தும் பொறுப்பு கடற்படையினருக்கே உரித்து என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையின்படி தமது குழுவினர் உறுப்பினர்களை தற்பாதுகாப்புக்காக இனிமேல் புலிகளின் படகுகளை சோதிப்பதில்லை என்றும் றெக்கில்சன் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

### இலங்கையில்...

கின்றார்கள். இந் நிலையில் அது தொடர்பான சட்டமூலம் ஒன்று பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கையில் 1976ம் ஆண்டிலேயே கடைசியாக தூக்குத் தண்டனை நிறைவேற்றபபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இன்று ஜீ.ஜீ.யின் நினைவுதினம்

தமிழர் விடுதலைக் கூட்டணி ஸ்தாபக தலைவர்களில் ஒருவரான சட்டமா மேதை ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் 26வது நினைவுதின நிகழ்வு இன்று முறபகல் 10 மணிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. (உ)

புலிகளின் பராமரிப்பில் உள்ள

## சிறுவர்களை அரசு பொறுப்பேற்றால் புலிகள் ஒப்படைக்கத் தயார்!

### அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு

(பேர்ளின்)

விடுதலைப் புலிகளிகால் வன்னியில் வைத்து பராமரிக்கப்படும் சிறுவர்களை இலங்கை அரசு பொறுப்பேற்று பராமரிக்குமானால் அச் சிறுவர்களை அரசிடம் ஒப்படைப்பதற்கு விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தயாராக உள்ளார் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

விடுதலைப் புலிகள் சிறுவர்களைப் படையில் சேர்த்துக் கொள்வதாக தவறான பிரசாரங்களை அண்மைக்காலமாகச செய்யப்பட்டு வருகின்றது. இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. இதனை நாம் பல்வேறு சந்தர்ப்பங்களில் மறுத்துள்ளோம். வடக்குக் கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு பெற்றோரையும், உறவினர்களையும் இழந்து தவிக்கும் சிறுவர்களுக்கே நாம் அடைக்கலம் கொடுத்துள்ளோம். விடுதலைப் புலிகளின் இந்த மனிதாபிமான செயற்பாட்டை, விடுதலைப் புலிகள் போருக்குச் சேர்க்கின்றார்கள் என்று கூறிச் சிலர் தமது அரசியல் வாழ்வை நடத்துகின்றனர். இவர்களில் யாராவது வன்னிக்கு வந்து பார்த்து அவர்களைப் பொறுப்பேற்பார்களேயானால் அதற்கு நாம் தடையாக இருக்க மாட்டோம்.

எமது இயக்கத்தில் சிறுவர்கள் சேர முன்வந்தபோதும் அவர்களை நாம் ஏற்றுக் கொள்ளாமல் அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைத்து வருகிறோம் என்றும் கூறினார். (ம)


MEDICAL CHECK UP
வைத்திய பரிசோதனை

நோய் வருமுன் காப்போம்
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்

40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள. நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்.
X-RAY, ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள்.
சிறுநீர்ப்பாசோதனை.
இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!
போக்குவரத்து வசதி கருதி

சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்
(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [C/5602]


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.02.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.